திராவிடநாடு

17—11—57 | வார வெளியீடு | விலை 16 காசு

# மாண்டவர் பிழைத்திட ஆமோ!

[ சா. இராமாநுசம் ]

இந்தியா என்பதோர் நாடு—என்ற
எண்ணத்தில் வந்ததிக் கேடு
நந்தமிழ் மொழிஎழில் வீடு—இந்தி
நலந்தாரா மாகள்ளிக் காடு
வந்தது இன்றது, ஓடு—இந்தி
வருகின்ற வழியெலாம் மூடு
பந்தென அதையெண்ணி ஆடு—இந்தி
பறந்திட வடக்கினைச் சாடு.

பள்ளியில் கட்டாயம் வேண்டும்—என்று
பல்லவி கேட்குது மீண்டும்
துள்ளியே எழுந்துநாம் ஈண்டும்—இந்தி
தொலைந்திட வழிசெய்வோம் யாண்டும்
மாண்டது அத்திட்டம் என்று—முன்னர்
மகிழ்வோடு இருந்திட நன்று
மீண்டது வருகுது இன்று—வாரீர்
மீளுவோம் போரிட்டு வென்று.

தாண்டவ மாடுது இந்தி—அஞ்சல்
தலைகளில் சொகுசாக குந்தி
வேண்டாத பொதுமொழி இந்தி—அதை
விரட்டிடுவோம் அனைவரும் முந்தி
ஈண்டவர் மரித்திட வரினும்—அதை
எத்தனை வகைகளில் தரினும்
மாண்டவர் பிழைத்திடப் போமோ—இந்தி
மறுமுறை நுழைந்திட ஆமோ?

## கேட்டீரா சேதி!

கருவாட்டுக்கு அமெரிக்காவில் அதிகக் கிராக்கியிருக்கிறதென்று டில்லி உணவு மந்திரி கிருஷ்ணப்பா வெளியிட்டிருக்கிறார். அதோடு மீன் ஒரு சத்துள்ள ஆகாரமென்றும், மீன் பிடிப்புத் தொழிலை முன்னேற்றுவதற்காக என்னென்ன வழி வகைகளைச் செய்யலாமென்பது குறித்தும் ஆலோசிக்க பம்பாயில் எல்லா மாகாணங்களின் உணவு மந்திரிகளையும் கூட்டி நவம்பர் 8-ந் தேதி, ஆலோசனைகள் நடத்தியிருக்கிறார். ஆழ் கடலுக்குள் மீன் பிடிக்குந் தொழிலை, அதிகப்படுத்துவதென இந்திய சர்க்கார் தீர்மானித்திருப்பதாகவும், இத்தொழிலில் ஈடுபடும் தனிப்பட்டவர்களுக்கும், கூட்டுறவு இயக்கங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கிறார். மீன் பிடிப்பதற்குரிய சாதனமான படகுகளைக் கட்டுவோருக்கும், பிடித்த மீனைப் பதப்படுத்தி கருவாடு முதலியவை செய்வோருக்கும் கூட நிதி உதவி அளிக்கப்படுமென்றும், வலியுறுத்தியிருக்கிறார். முதல் முயற்சியாக, கோழிக்கோட்டில் ஒரு மீன் பிடிப்பு நிலையமும் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருக்கிறதாம். மீனால், நாட்டின் உணவுப் பிரச்சினையில் கணிசமான பகுதிக்கு நிவாரணம் காணமுடியுமென்றும் அதோடு அமெரிக்காவிலிருந்து டாலர் சம்பாதிக்க மிகவும் பயன்படுமென்றும் இந்திய அரசு கருதுவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார்.

*

நவம்பர் 9-ந் தேதி அதே பம்பாயில் இந்தியக் குடியரசுத் தலைவர் ராசேந்திர பிரசாத் ஒரு மாநாட்டைத் துவக்கிவைத்திருக்கிறார். உலக மரக்கறி உண்போர் மாநாடு இது!! மாமிச உணவு ஆத்மீக வளர்ச்சிக்கு உகந்ததல்லவென்றும், கொன்று தின்னும் குணத்தால் தான் அணுக்குண்டு வீசுமளவுக்கு மனித சுபாவம் வளர்ந்திருக்கிறதென்றும், உயிர்கள் எந்த ரூபத்திலிருந்தாலும் அன்பு செலுத்தவேண்டும் என்றும், குடியரசுத் தலைவர், விளக்கினாராம். தாவரங்கள் கூட உயிர் வர்க்கத்தைச் சேர்ந்தவையே என்கிற ஜே. சி. போசின் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உண்டு என்பது அறியாதவரல்ல, பிரசாத்.

*

ஒரு அமெரிக்க மாதுக்குச் சந்தேகம் வந்துவிட்டது. "என்னடா! நேற்று கிருஷ்ணப்பா அப்படிப் பேசினார். இன்று பிரசாத் இப்படிப் பேசுகிறாரே," என்கிற ஐயத்தால், அந்த மாநாட்டிலேயே பிரசாத்தை நோக்கிக் கேட்டாராம். "ஐயா! இவ்வளவு அருமையாகப் பேசினீர்களே. ஆனால், உங்கள் சர்க்காரின் தூதர்கள், அமெரிக்காவிலும் இதர நாடுகளிலும், மாமிச உணவுகளையும், மது பானங்களையும் நன்றாகச் சாப்பிடுகிறார்களே !!", என்று. இது சரியான கேள்விதான். இது எங்கள் வாழ்க்கையிலுள்ள முரண்பாட்டைத் தெரிவிக்கிறது." என்பதாகப் பதிலளித்தாராம் பிரசாத்.

*

"பெரிய தொழிற்சாலைகள் அனைத்தும் வடநாட்டிலேயே குவிக்கப்படுகின்றன; தொழில் முன்னேற்றத்துறையில் தென்னாட்டு மாநிலங்கள், குறிப்பாகத் தமிழ்நாடு மிகவும் புறக்கணிக்கப்படுகின்றன. இதன் விளைவாக, வேலையில்லாத் திண்டாட்டமும், பற்றாக்குறை வேலைக் கஷ்டங்களும் நமது மாநிலத்தில் பெருமளவு பெருகி நிற்கின்றன" என்று முன்னாள் டில்லி மந்திரியும், பிறகு கவர்னராயிருந்தவரும், இப்போது, நிதிக் குழுவின் தலைவராக இருப்பவருமான கே. சந்தானம் குடந்தை ராமவிலாஸ் கம்பெனியின் விழாவில், பேசியிருக்கிறார்.

*

பச்சையப்பன் கல்லூரியில் பேசிய ஆச்சாரியார், இந்தி அரசு மொழி யாவதுபற்றிக் கண்டித்துப் பேசுகையில், "இரண்டு மாற்றாந் தாய்களுக்கிடையிலே ஒருவன் இருக்க முடியும்; ஆனால் இரண்டு தாயுக்கு ஒருவன் எப்படி மகனாகயிருக்கமுடியும்?" என்று கேட்டிருக்கிறார், ஒரே ஒரு மொழிதான் ஒருவனுக்குத் தாய் மொழியாக இருக்க முடியும் என்பதை விளக்க! இந்த கிழமை சென்னை மேல்சபையில் பேசிய டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்கள், "இந்திய அரசியல் சட்டத்தில் தேசிய மொழி என்கிற அம்சம் கிடையாது; அரசு மொழி என்றுதான் உள்ளது. தேசிய மொழியென்று இந்தியாவில் சொல்ல வேண்டுமேயானால் இரண்டே மொழிகள்தான் அதற்கு இலாயக்கு. ஒன்று திராவிடத்துத் தமிழ்; இன்னொன்று ஆரிய சம்ஸ்கிருதம்" என்று வெளியிட்டிருக்கிறார்.

மைசூர் முன்னாள் முதலமைச்சர் அனுமந்தய்யா "எந்த வகையில் பார்த்தாலும் இந்தியாவின் ஆட்சி மொழியாவதற்கு இந்திக்கு எந்தவிதத் தகுதியும் கிடையாது. இந்தியை, இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டால் தென்னாட்டவராகிய நாம் என்றென்றைக்கும் வடநாட்டவரால் ஆளப்படுகிறவர்களாகவே இருக்க நேரிடும்" என்று கூறியுள்ளார், பெங்களூரில்.

*

**இவ்வளவேன்! இந்தி மாநில மான பீகாரிலேயே, இந்தி ஆட்சிமொழியாவதற்கு இன்னும் தகுதி பெறவில்லை என்று பீகார் மாநில சட்டசபை முடிவு செய்திருக்கிறது, இந்தவாரம்!!!**

# அவமானம்

16] ஆண்டு சந்தா ரூ. 8 [17—11—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 18

கம்பீர நடைநடந்து,
சுந்தர ஆடைபுனைந்து,
கைவீசி வந்தேன், நானே!
கபர்தார், 'ஜே' போடுவீர் !!

என்று, நாடக மேடைகளில் தோன்றும் நகைச்சுவை நடிகர்கள்கூட இப்போது, பாடுவதில்லை! ஆனால், நாட்டையாளும் சர்க்கார், சட்டத்தின்மூலம், 'கவுரவம்' தேட முனைந்திருக்கிறது!! "டேய்! என்னை யாரென்றடா, நினைத்தே? என்னிடம் கும்பலிருக்கிறது! ஊம்னு போதும்... குத்தி உன் குடலை எடுத்திடும்", என்பது சுருளீட்டிப் பயில்வாயினுக்குச் சொந்தமான குரல். ஆனால், இது, இப்போதெல்லாம் ஆளுவோருக்கும் சொந்தமாகி வருவதைப் போல், அடக்குமுறைப் பாணங்கள் அவிழ்த்துவிடப்படுகின்றன. பலத்த 'மெஜாரிடி' இருக்கிறதென்னும் தைரியத்தால், காமராஜர் அரசு, மசோதா ஒன்று கொண்டுவந்து, சட்டமும் ஆக்கியிருக்கிறது! தேசிய கவுரவத்தைக் காக்கும் சட்டமாம், அது!!

கத்தி முனையிலே கிடைப்பதல்ல, கவுரவம்; ஆனால் அரசு, அதனை, அடக்குமுறையின் மூலம் பெற்றுவிடலாமென்று கருதுகிறது.

தேசீயக் கொடி—காந்தியடிகள் படம் — அரசிலமைப்புச் சட்டம் — ஆகியவைகளைக் கொளுத்தினால், பிடித்தடைப்போம் என்று புதியதொரு சட்டம், செய்திருக்கிறார்கள். இதன் மூலம், "தேசீய அவமதிப்பு" ஏற்படாமல் தடுத்துவிடப் போகிறார்களாம். தேசத்தின் கவுரவம், காற்றிலே பறந்துகொண்டிருக்கிறது, அமெரிக்காவில் கைநீட்டிப் பிச்சை கேட்டுத் திரும்பிய டி. டி. கே.யால்!! இலங்கையிலும், இன்னபிற இடங்களிலும், டில்லியின் சொல்லினை மீறிடும் காரியங்கள் நடக்கின்றன. காசுமீர்ப் பிரச்னையில், கவுரவம், ஊசி முனைகூட மிஞ்சவில்லை என்கின்றனர், அறிஞர்கள். பத்தாண்டு காலச் சுதந்திர ஆட்சிக்குப் பின்னும் பசியையும் பட்டினியையும் போக்கிடும் வழி செய்யவில்லையே—கையேந்துகிறோமே கனடாவையும் ஆஸ்திரேலியாவையும், என்று கதறுகிறார், நேரு பண்டிதர். இதிலெல்லாம், கவுரவம் போகவில்லையாம்! ஆனால், உள்நாட்டில் தமது கொடிக்கும் அரசியல் ஏட்டுக்கும் மதிப்பைக் கொண்டுவர சட்டம் செய்திருக்கிறார்கள், சட்டம்!!

இந்திய உபகண்டத்தின் எந்த மாநிலத்திலும் இப்படியொரு சட்டம் இடையாது—ஆனால், இங்கே, உருவாக்கப்பட்டிருக்கிறது. குழைந்தும் நெளிந்தும், இச்சட்டம் கொண்டுவருவதற்கான காரணங்களைச் சட்டசபையில் கூறியிருக்கிறார்கள், அமைச்சர்கள்.

கொடியினை, கோவணத்துணி போன்றது தானே, என்று கூறுவோரல்ல நாம்! அரசியல் சட்டத்தினையும், அச்சடிக்கப்பட்ட காகிதம் தானே என்று கருதவில்லை, நாம்! காந்தியடிகள் படம் தானே என்று அலட்சியமும் தெரிவிக்கவில்லை!!—ஆனால், இவைகளைக் கொளுத்துவேன் என்று கூறுவோரைப் பிடித்தடைப்பதன் மூலம், தேசக் கவுரவத்தைக் காப்பாற்றப்போகிறேன் என்கின்றனரே, இது மகாகேவலம் என்போம். ஏனெனில், தேசத்துக்குக் கவுரவம் என்பது, தடியடியாலோ, காராக்கிரகத்தில் அடைப்பதாலோ உண்டாக்க முடியாது! அந்தக் கவுரவத்தைத் தர மறுப்போரும், தாமே உணர்ந்து, முன்வந்து அளிக்கும்படி செய்வதுதான் ஒருஅரசின்புத்திசாலித்தனத்துக்குஅறிகுறியாகும்! அதைவிட்டு, "எனக்கு மரியாதை கொடு. இல்லாவிடில், அடிப்பேன். மாட்டுக் கொட்டிலில் போட்டு பூட்டுவேன்," என்பது, பழைய மிராசுதாரர்களின் பாணியினைக் கவனமூட்டுமே ஒழிய, நல்லரசின் நடவடிக்கையாக எவரும் கருதார்.

பெரியார் அவர்கள், தேசியக் கொடியை எரிக்கப்போவதாக, முன்போர்தடவை சொன்னார். உடனே காமராசர் அரசு, அவசரச்சட்டம் பிரகடனம் செய்யவில்லை! ஆனால், இப்போது பெரியார், அரசியலமைப்புச் சட்டத்தைக் கொளுத்தப்போவதாகவும் காந்தியடிகள்—உருவை, அல்ல! உருவைத்தான் கோட்சே கொன்றுவிட்டானே!! —படத்தைத்

தீயிலிடப்போவதாகவும் ஆங்காங்கே பேசிவருவது கண்டு, உடனடியாக அவைகளைத் தடுக்கச் சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்கள். சட்டத்திற்குக் காரணம், தேசத்தின் கவுரவத்தைக் காக்கவாம்! அதனால், சட்டத்துக்கு, தேசிய அவமதிப்புத் தடைச் சட்டம் என்றே பெயரும் அளிக்கப்பட்டுள்ளது!!

பெரியார் அவர்கள், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் கொளுத்துவேன், காந்தியடிகளின் படத்துக்குத் தீயிடுவேன் என்கிறார். ஏன் அவ்வண்ணம் கூறுகிறார்? சாதி ஒழிப்பில் சர்க்கார் சிரத்தை எடுத்துக்கொள்ளவில்லை என்பதுதான் அவர், தெரிவிக்கிற மூலகாரணம் எனத்தெரிகிறது. இதற்காக,படத்தையும் அரசியலமைப்பையும் கொளுத்திவிட்டால் போதுமா,சாதிச்சனியன் ஒழிந்துபோய்விடுமா என்பது வேறு விஷயம். ஆனால், சாதிப் பாகுபாடுகள் கூடாதென்பதே தங்கள் கொள்கை என்று பறைசாற்றிடும் காங்கிரஸ் அரசு, சாதியொழிப்புச் சம்பந்தமாகத் துளியேனும் சிரத்தை எடுத்துக்கொண்டதா? பெரியார் அவர்களைப் பெம்மானே! என்று தேர்தல் காலத்தில் போற்றியது, தமிழ்நாட்டுக் காங்கிரஸ். திராவிட கழகத்தின் கொடியுடன், தமது மூவர்ணக் கொடியையும் பறக்கவிட்டனர், தமிழ்நாட்டுக் காங்கிரசினர். இரவு பகல் எனப்பாராது, காங்கிரஸ் வெற்றிக்காக அலைந்தார், பெரியார். கழகமும் காங்கிரசும் ஒன்றாகிவிட்டதோ என்று கருதுகிற அளவுக்கு, காட்சிகள் தென்பட்டன, நாட்டில்.

காங்கிரஸ் வெற்றி பெற்றதும், வெற்றி பெற்ற எம். எல். ஏ-க்களை மட்டுமல்ல, பெரியாரையும் வாகனங்களிலே ஏற்றி, முன்னே மூவர்ணக்கொடியினர் செல்ல, விழாக் கொண்டாடினர்! பெரியார், காமராசரை நம்பினார்—தமிழகத்திற்கு கிடைக்கமுடியாத அமுதம், என்றார்—அவர் மூலம் தன் காரியங்களைச் சாதிக்கப்போவதாக பல கூட்டங்களிலே பேசினார்—சாதி ஒழிப்பு மாநாடுகள் போட்டு காமராசரையும் அழைத்துவந்து பேசிடச் செய்தார், — சென்றவிடமெல்லாம், திராவிட கழகத்தவர்கள் அளித்த மாலைகளைப் பெற்று மகிழ்ந்தார் காமராசர். மாலை மணக்கிறது—சாமரம் வீசுவது நன்றாக இருக்கிறது —கிடைத்தவரையில் இது லாபந்தானே, என்று வியாபாரியானாரே ஒழிய காமராசர், துளியளவும் துணியவில்லை, பெரியாரின் குறை போக்க. "பிராமணர்கள் ஓட்டல்" என்று சாதியினைக் குறிப்பிட்டு ஓட்டல்களிலுள்ள, "போர்டுகள்" இருக்கக் கூடாதென்று மறியல் ஒன்றை ஆரம்பித்துப் பலமாதங்களாக நடத்திவருகிறார் பெரியார்! இப்படியொரு இயக்கம் நடக்காத கேரள அரசு, "இதுபோல் போர்டு போடாதீர்கள். போட்டால், சட்டம் கொணருவோம்" என்று அறிவித்திருக்கிறது. ஆனால், பெரியாரின் அன்பைப் பெற்ற காமராசர் அரசு இதுபற்றி கவலைகூடப்படவில்லை.

சுயமரியாதை மணம் சட்டப்படி தவறு என்றிருப்பதைக் காமராசர் மாற்றுவார், அதன்மூலம் புரோகித முறைகளை மறுப்போருக்கு வழி செய்து தருவார், மேல்சாதியினரின் துணையின்றித் திருமண விழாக்கள் நடைபெறுதலுக்கு வகைசெய்வார் —என்று எண்ணப்பட்டது. "என் வீட்டிற்கு வந்தால் என்னகொண்டுவருகிறாய்? உன் வீட்டிற்கு வந்தால் என்ன தருகிறாய்?" என்பதுபோல ஆயிற்றே ஒழிய, கடுகளவும், கவனிக்கவில்லை, காமராசர்! ஏதோ தனக்கு அந்தாதி பாடவும், துந்துபி முழக்கவும் கிடைத்த ஒரு 'புது ஒலிபெருக்கி' என்று எண்ணினாரே ஒழிய, பெரியாரின் குரலுக்கு, செவி மடுக்கவில்லை!!

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு, புகைமூட்டுவேன் காந்தியடிகள் படத்துக்கு அரசியல் சட்டத்தைப் பொசுக்கிச் சாம்பலை அனுப்புவேன் உங்களுக்கு, என்று அறிவிக்கிறார். அதைக் கண்டதும், சட்டம் செய்துவிட்டால் போதுமா! சட்டசபையில் தி. மு. க. சார்பில் எடுத்துக் காட்டப்பட்டதுபோல், காமராசர் ஓடோடியும் பெரியாரைச் சந்தித்து, "ஆவன செய்கிறேன்," என்றாவது, அல்லது "ஆகட்டும் பார்க்கலாம்", என்கிற வழக்கமான உறுதிமொழியையாவது அளித்திருக்க வேண்டாமோ? பெரியாரின் பெருமையைப் பற்றி, தேர்தல் நேரத்தில், எப்படியெப்படி யெல்லாம் புகழ்ந்தார்கள் இவர்கள்! 'மீரான் சாகிபு'. தெரு நோக்கி, எத்தனை தடவை மூவர்ணக் கொடிபோட்ட கார்கள் பறந்தன அப்போது!! அந்தக் கார்களில் ஒன்றுகூடக் கிடைக்கவில்லையா, காமராசருக்கு — 'திருத்தூதர்கள்' உண்டே, அவர்கள் மூலமாவது, பெரியார் அவர்களின் மனதை மாற்ற முயன்றிருக்கக் கூடாதா, காமராசர். செய்யலாம்—முன்பு இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்றபோது, பெரியாரை அழைத்து அப்போது முதல்வராக இருந்த ஓமந்தூரார் பேசினார். ஓமந்தூராருக்கில்லாத "அதிர்ஷ்டம்", காமராசருக்கு உண்டு இப்போது! காமராசர், நேரில் விளக்கினால், பெரியார் ஒப்புக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உண்டு, என்பதை எல்லோரும் அறிவர்!! இருந்தும், காமராசர், அம்முயற்சியைச் செய்யவில்லை. பேசாமல், வெளியூருக்குச் சென்றுவிட்டார்—சிடகோடிகள், எப்படியாவது, இச்சட்டத்தை நிறைவேற்றிடும் என்று !!

சட்டசபையிலே, காமராசரின் குரலாக விளங்கும் நிதியமைச்சர் சுப்ரமண்யம், "பெரியாரைக் காமராஜர் நாடவில்லை. அவர்தான் உரிமையும் உறவும் கொண்டாடுகிறார்", என்று உரைத்தார்.

(13-ம் பக்கம் பார்க்க)

# அவ்வெண்ணிலவில்!

**தேன்** மணக்கும் சோலையாம் தென்னவன் வளநாட்டில், மான் உலவும் பறம்பு மலை — 'இல்லை' என்ற சொல்லறியாப் பெருந்தகையாம் பாரி மன்னன் எல்லை! போர் அம்பு மார்பகத்தைப் பிளக்கும்போதும் விழியம்பு கொட்டாத நெஞ்சழுத்தம் கொண்டோன். வேல்பட்ட தழும்பும்—வாள்பட்ட வடுவும் அவன் வீரம் காட்டும். ஓர் தட்டிலே பொன்னும்-ஓர் தட்டிலே நெல்லும்-ஒக்க விற்ற கார் தட்டிய பஞ்சத்தின் போதும் ஈகைக்கு "இதோ நான் இருக்கிறேன்" என மார் தட்டிய வள்ளல் அவன். எறும்பினங்கள் வரிசை காட்டும் தன்மைபோல — கரும்பொத்த கவிதை செய்யும் புலவர் கூட்டம் அவனது பறம்பு மலை நோக்கிப் படை திரட்டுமாம்! கொதிக்கும் கும்பிக்குக் குளிர்ச்சி தேட!!

* * *

"வாழ்க்கையிலே பாதி பெற வந்தேனே—கவிதை மன்னா! உன் வறுமையிலே பாதி தந்து வாட்டுகிறாயே" எனக் கேட்கும் இல்லறத்துக் குயில்களுக்கு—இதயத்தால் பிழிந்தெடுத்த துயரத்தை எத்தனை நாள் ஆறுதலாய்க் காட்டுவது! காவியத்தைக் காட்டி விடின், கடும்பசியும் பறந்திடுமோ?

துயரபாரம் இதயத்தைச் சூடேற்ற—இதய வெப்பம் ஆவியாகி விழிகளை மோத—தாளாத விழியிரண்டும் தாரையென நீர் பொழிய—கலங்கி நின்றாள் கவிஞனுக்குப் பெண்டாக வந்தவள்.

"பொறுக்க முடியாது இனிமேலும் புறப்படு கண்ணே!" புலவன் சொன்னான். பூங்கொடி தொடர்ந்தாள். பறம்பு மலை நோக்கி இருவரும் நடந்தார்கள்.

கோடையிலே கூவுகின்ற குயில்! ஓடையிலே துள்ளுகின்ற கயல்! பேடையோடாடுகின்ற மயில்!

கண்டபடி, நடந்தார்கள், கவிஞனும் அவன் காதலியும்.

வெப்பம் தாங்காத எருமைக் கூட்டம், கயலாடும் குளத்திறங்கி, கழுநீர் மலர் தின்று — புரளும் கெண்டையைக் காலடியில் துவைத்துக் கொன்று — தெப்ப விழா நடத்துகின்ற காட்சி கண்டான் கவிஞன்.

"ஆகா! மூவர் சிறப்பில் மூத்த சிறப்பு இதுதானோ?"

புறநானூற்றில், பாரி மகளிர் பாடியதாக வரும் 'அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்' எனும் கவிதையினை வைத்து A. K. **வில்வம்** சமைத்துத் தரும் கற்பனை ஓவியம்.

பாட்டு பிறந்த கதையை புதிய கோணத்தில் காணுகின்றார்.

"என்னத்தான்! குளத்தில் எருமை புரளுவதற்கும்--மூவரின் மூத்த சிறப்பிற்கும் முடிச்சுப் போடுகிறீர்கள்?"

"எதையோ நினைத்தேன் சொன்னேன்!"

ஒரு பாணனும் — விறலியும் எதிரே வந்தார்கள். கவிஞன் அவர்களை உற்று நோக்கினான்.

பொலிவிழந்த முகம்! புகையும் நெஞ்சு—பாணனுக்கு! களை இழந்த தோற்றம்—கவலையின் வடிவம்—விறலிக்கு!!

கவிஞன் குழம்பினான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஏன் அழுகிறாய்!" கவிஞன் உரத்த குரலில் கேட்டான்.

"பாரி இப்பொழுது இல்லை!"

"எங்கே?"

"சாவுலகம் சென்றுவிட்டான்!"

"பாணா!" கவிஞன் கதறினான்!

"ஆம் 'மூவர் சிறப்பு' அவனைக் கொன்றுவிட்டது! மூண்டெழுந்த பெரும் புகையில் மறைந்து போனான்!"--பாணன் சொன்னான்.

"அடையா நெடுங்கதவு அடைத்துவிட்டதே அத்தான்," அவள் சொன்னாள்.

பாணனும் விறலியும் அமைதியாக நடந்தார்கள்.

கவிஞன் பூங்கொடியைப் பார்த்தான்.

"மூவரின் போர் அம்பு திசை மாறிப் பாய்கிறது. எருமைக்கும் மூவரின் சிறப்புக்கும் தொடர்பு கேட்டாயே; இப்பொழுது பொருத்திப்பார்!"

சேற்றிலே எருமையும் புரளுகிறது. செந்தாமரையும் பூக்கிறது—மூவேந்தரின் நெஞ்சமும் இப்போது சேறாகத்தான் கிடக்கிறது"

* * *

"அத்தான்!"

"என்ன பூங்கொடி!"

"சொந்த நிலம் திரும்புவோமா?"

"ஏன்?"

"ஈந்து சிவந்த இருகரங்கள் சோர்ந்து விழுந்த பிறகு — பாட்டுக்குப் பொன் கொடுக்க பறம்பில்

யார் இருக்கப் போகிறுர்கள்— அதனுல் சொன்னேன்!''

"பொன் விளக்கே — பாரி செத்தாலும் அங்கே அவன் பண்பின்னும் செத்திருக்காது! தமிழன் செத்தாலும் தமிழ் சாகாது! அதுபோல—வள்ளல் செத்தாலும் அவன் உள்ளம் கொண்டோர் அங்கே சிலராவது இருப்பர்! வந்தது வந்தோம்— இன்னும் சிறிது தூரம் — கொட்டிக் கொடுத்த அக்கோமானின் திருநகரில் நம் விழிநீரைக் கொட்டியாவது ஆறுதல் பெறுவோம்!''

தாளாத சோகத்தோடு அத் தமிழ் நெஞ்சம் பேசிற்று.

பறம்புநகர் நோக்கி--அப்பாவலனும்—பருவ நிலாவும் சென்று கொண்டிருந்தனர்.

* * *

செவ்வாழைத் தோட்டம்... அதையடுத்து செங்கரும்புத் தோற்றம்! கண் திறந்து மடைபாயும் தென்னையின் தோப்பு! பச்சைநிறப்பட்டுடுத்தி...இச்சையை இதயத்தில் கிளறிவிடும் நிலப் பெண்ணின் கோலம்! தேன் கசியும் மலர்க் குலத்தின் செவ்விதழைக் கவ்வியதால் — இன்பம் மீறிட, இன்னது செய்வதென்று அறியாது-தேன் குடிக்கும் வேலையையும் மறந்து பாடிக்கிடக்கும் வண்டினங்கள்!

புலவன் திகைத்து நின்றுன்!

"மூவரின் நெஞ்சமதில் மூண்ட தீக்குக் காரணம் இதுதான்!'' கவிஞன் கூறினுன்.

தொடர்ந்து நடந்தார்கள்.

"அத்தான்! அதோ பாருங்கள்!''

"ஆனைகட்டிப் போர் அடிக்கும் நெற்களங்கள்!'' கவிஞனின் பதில் இது.

"ஆனுலும் மறையவில்லை — பூனை தூங்கும் அடுக்களைகள்!'' பூங்கொடி சொன்னுள்.

புலவனின் நெஞ்சத்தில் சுருக்கென்று குத்தியது.

"தலைமுழுக்கும் நீரானுலும்— தாமரை இலையில் நீர் தங்காது! புலவனும் தாமரை இலை போலத்தான்! பொன்மழை பெய்தாலும் அது புலவன் தலையில் ஒட்டாது!'' அவள் பேச்சில்லை — அவனோடு நடந்தாள்.

* * *

பாவலனும் — பனிமுத்தாம் அவன் மனைவி பூங்கொடியும் பறம்புமலையடைந்தனர்.

அங்கே ஒரு சிறு குடிசை!

தென் திசைக்கு முகம் காட்டும் வாயிற்புறம்— தென்றலுக்கு இங்கே தடையில்லை எனக்கூறும்!

பாரியின் கடை திறந்த அரண்மனைபோல்—அந்தக் குடிசையின் கதவுகளும் திறந்து கிடந்தன. குடிசையை அடுத்து ஒரு மேடை, இலை உதிர்ந்து விரிந்த மரமொன்று அந்த மேடைக்குக் குடைபிடித்து நின்றது.

புலவன் அந்த மேடையை நோக்கி நடந்தான்.

உயர்குணத்துப் பாரி — துயர் சுமக்க விட்டகன்ற துணைக்கிளிகள் இரண்டுபேர்! கூந்தல் விரித்து குமுத மலர் கிடப்பது போல் அந்த மேடைமீது அமர்ந்திருந்தனர்.

"அத்தான்! அதோ பாரி ஈன்றெடுத்த பைங்கிளிகளாம், அங்கவையும்—சங்கவையும்!'' பூங்கொடி கவிஞனிடம் கூறினுள்.

கலைமணித்தேர் கட்டழகி கண் கலங்கும் கொடுமை கண்டு — நெஞ்சம் பதறினுன் — அவன் இமைக் கதவுகள் படபடத்தன.

கல் இழைத்த கட்டிலிலே கனக மணிச் சிலைகளெனக் கிடக்கவேண்டிய பருவம்! அந்தோ! கட்டாந்தரையில்—கால் கிழிக்கும் கூரிய கற்களில் பாதம் பதித்துக்கிடப்பதா? போர் மழையே! பொல்லாத புரவலனே! பாண்டியனே! சோழனே! பாரியைக்கொன்றுயே! பாழும் நெஞ்சே! இப் பசுங்கிளிகளைக் கொல்லாமல் ஏன் விட்டாய் —கொடுமை செய்தாய்!'' கவிஞன் கோபக் கனலை மூவேந்தர் பக்கம் முடுக்கிவிட்டான்.

"பூங்கொடி—பார்த்தாயா?''

"ஆம் அத்தான். முழுநிலவை சரியளவாய் உடைத்தெடுத்து வடித்து விட்ட சிலை வடிவு — அழகின் எல்லை — இருவருமே!'' பூங்கொடியின் கண்களும் கலங்கின.

* * *

துயர பிம்பங்களாய் வீற்றிருந்த இருவரில் அங்கவை எழுந்து வந்தாள்.

"யார் நீங்கள் — என்ன வேண்டும்!''

"பாடுவோம்; பரிசில் பெற வந்தோம்!''

"கட்டிய துணியும்—கண்ணீரும் தவிர ஒன்றுமில்லையய்யா—எங்களிடம்!'' வழிகின்ற கண்ணீரோடு புகன்றுள்.

"பாரியின் குலக் கொழுந்தே! உன் தந்தையின் கால்பட்ட ஒரு பிடி மண்! இந்த ஏழைக் கவிஞனுக்கு ஒரு கோடி பொன்! அள்ளிக் கொடுத்தாலே — வள்ளலின் குலம் வாழ்த்திச் செல்லுகிறேம்'' தாங்க முடியா துயரத்தை அடக்கிய வண்ணம் கவிஞன் சொன்னுன்.

"கவிபாடும் புலவரே! 'போ' என்ற சொல் அறியா நெஞ்சம்! அதிலே தீயள்ளிப் போடாதே! கொஞ்சம் பொறு — பொன்னோடு கபிலர் வருவார், பொருளோடு உங்களை அனுப்புகிறேன்!''

"கபிலரா — அந்தக் கவிதை மன்னர் இங்கு தான் இருக்கிறுரா?''

"ஆம்—திருக்கோவிலூர் சென்றுள்ளார் — ஈரெட்டு நாட்களில் திரும்புவதாகச் சொல்லிவிட்டு — நாளை வந்துவிடுவார்!''

அவள் நீராடும் விழிகளிலும் 'கொடை' நிழலாடும் காட்சி கண்டான் கவிஞன். தங்கிச் செல்ல சம்மதம் தந்தான்.

நாழிகை உருண்டுகொண்டிருந்தது.

ஒரு நாள்—இரண்டு நாள்—கபிலர் வரவில்லை.

*

பறம்பு மலையின் எழிலையெல்லாம் சுற்றிப் பார்த்தான்.

அவன் கற்பனையில் புது முறுக்கு ஏறியது.

யாழ் எடுத்தாள் பூங்கொடி— இன்னிசை பிறந்தது. புலவன் அழகுக் கவி பாடினுன்.

அந்த இசை கேட்டு அங்கவையும் சங்கவையும் மன அமைதி பெற்றனர்.

முகவரி மாற்றம்:

**தில்லை - வில்லாளன் எம். ஏ.**

**72 - 73 கடைத் தெரு,**

**சிதம்பரம் S. A.,**

கலைமானின் யாழோசை—மலைத் தேனின் சுவைதனையும் மிஞ்சி விட்டது.

கவிஞனின் குரலினிமை—அங்க வைக்குச் செங்கரும்பின் சாருக—தென்னிளநீராக இனித்தது.

சுந்தரக் கவிஞனின் அகம் கண்டு, சுகம் கொண்டாள்!

கவிஞன் பாடிக்கொண்டே இருப்பான்—கட்டழகி அங்கவை யும் தன்னைமறந்து சுவைப்பாள்!

"தேன் குடித்தேன் கவிஞரே!" என்ருள் ஓர் நாள்!

"இங்கேயே இருங்கள். இன்ப இசை பொழியுங்கள்" என்ருள் இன்னெரு நாள்.

*

பூங்கொடியின் நெஞ்சத்தில் புது எண்ணங்கள் முளைவிட்டன. தானிடும் 'உறைக்கு' இன்னெரு கத்தியும் சேருமோ எனும் சந்தேகம் துளிர்விட்டது.

"அத்தான் புறப்படலாம்" என்ருள் ஒரு நாள்;

"போகலாம்—என்ன அவசரம்" என்ருன் புலவன், பூங்கொடி அமைதியானுள்.

*

ஒரு நாள் நள்ளிரவு!

சங்கவை திடுக்கிட்டு எழுந்தாள். 'அக்கா! அக்கா! என்று கூவினுள். அங்கவையைக் காண வில்லை.

அப்பொழுதே — பூங்கோதை யும் தன் அறையில் துயில்விழித்தாள். 'அத்தான்! அத்தான்!' என்ருள் அருகில் கிடந்த அத்தானைக் காணும்!

அங்கிருந்து வேகமாக எழுந்தாள். அங்கவையின் அறைக்கு விரைந்தாள் பூங்கொடி. அங்கே சங்கவைமட்டும் தனிக்கொடியாய் வாடி நின்ற காட்சிகண்டு திடுக்கிட்டே போனுள்.

"எங்கே உன் அக்கா!" பூங்கொடி கேட்டாள்.

"நானும் அவளைத்தான் தேடு கிறேன்!"

"இங்கே 'இவள்' இல்லை அங்கே 'அவர்' இல்லை!"

பூங்கொடி புலம்பினுள்.

"ஏன் எதற்காக இப்படிப் புலம்பவேண்டும்!"

"புரிந்துகொண்டேன், 'பொருளோடு அனுப்புகிறேன்' என்ருளே உன் தமக்கை — அதன் பொருளை இப்பொழுதுதான் புரிந்துகொண்டேன்! கலை நெஞ்சம், அலை நெஞ்சம் என்பார்கள்! என் ஆளனின் நெஞ்சமும் அப்படித்தான் ஆகிவிட்டது!"

பூங்கொடி அங்கிருந்து நகர்ந்தாள். பொல்லாத பழி கேட்டு சங்கவை புழுப்போலத் துடித்தாள்.

*

பொழுது விடியுமுன் புலவன் வந்தான்.

'இரவு எங்கே போயிருந்தீர்!"

"இயற்கையோடு—நிலவுப் பெண் குலவுகின்ற காட்சிகாண!"

"இன்பம் கிடைத்ததா?"

"ஏராளம்—ஏராளம்!"

அதற்குமேல் பூங்கொடி பேச வில்லை.

*

"இரவு எங்கே அக்கா போயிருந்தாய்!"

"தூக்கம் வரவில்லை — சோலையெழில் கண்டு வந்தேன்."

"துயரமிகுதியால் தூக்கம் வர வில்லையா?"

"ஆமாம், இரணத்தில் சீழ்அதிகமாகிவிட்டால் யாராவது அழுத்த வேண்டும்போல் தோன்றுவதில்லையா?"

"ஓ! துணைக்கு யாரக்கா?"

"கோல நிலா! சோலை எழில்!"

"ஆறுதல் கிடைத்ததா?"

"ஆமாம்!"

அதோடு சங்கவை பேச்சை முடித்துக்கொண்டாள்.

*

காலை பிறந்தது.

கைநிறையப் பொருளோடு கபிலர் வந்தார்.

புலவனும் பூங்கொடியும் வந்த சேதியைப் பொற்சிலைகள் சொல்லக் கேட்டார்.

கபிலரின் தலைமையில் கவிதையரங்கிற்கு ஏற்பாடு செய்தாள் அங்கவை!

*

பூங்கொடியின் நெஞ்சத்தில் புயல் உருவாகிக் கொண்டிருந்தது.

*

கபிலர் மேடையில் வந்தமர்ந்தார்.

விழிக்குளத்தில் கயல்மீன்கள் புரளுகின்ற அங்கவையும், பிறை நிலவை நுதல் அழகாய்க் கொண்டிருந்த சங்கவையும்—இருநிலவு நிலத்திறங்கி நடந்து வருதல் போல—கபிலருக்குப் பக்கத்திலே வந்தமர்ந்தனர்.

"பூங்கொடி — நீ பாடம்மா!" என்ருர் கபிலர்.

அங்கவை குறுக்கிட்டு,

"கவிவாணரே! புலவர் முதலில் பாடட்டும்!" என்ருள்.

புலவன் மெள்ள எழுந்து கபிலரை வணங்கினுன்.

"என் அங்கவையின் விருப்பம் போல்—புலவ! நீயே முதலில் பாடு!"

"இல்லை தலைவ! அங்கவையே பாடட்டும் — அழகாகப் பாடு கிருள்!"

பூங்கொடியின் நெஞ்சத்தில் சாட்டையடி விழுந்தது.

"நானு"

"ஆம்...அன்றிரவு பாடினுயே அந்தப் பாட்டு!"

அங்கவைக்கே அதிர்ச்சியாக இருந்தது—புலவனின் வேண்டுகோள்!

"ஆம்! 'அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்' அதைப் பாடு!"

சங்கவையும் திகைத்தாள்.

பூங்கொடி, புகைநெருப்பு சிந்து கின்ற எரிமலைபோல் ஆனுள்.

அங்கவைபாடினுள். "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்..." முதலடிகூட முடியவில்லை!

---

## பிறப்பு

ஆமதாபாத் தி. மு. க. தோழர் சீத்தாராமனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து, மணிமொழி என்று பெயர் வைக்கப்பட்டதன் நினைவாக ரூபா 2—0—0 திராவிடநாடு வளர்ச்சிக்கு அளிக்கப்பட்டது.

---

பூங்கொடியின் கையிலே இருந்த யாழ் உருண்டு—'அபசுரம்' எழுப்பிற்று!

அவள் நரம்புகள் முறுக்கேறி இதயத்தைப் பிழிந்தது.

"போதும் நிறுத்து...!" பூங்கொடி கூச்சல் போட்டாள்.

"ஏன்...எதற்காக இவ்வளவு குழப்பம்!" அவள் கண்கள் அருவியாயின. அங்கவை பதறி நின்றாள்.

"அங்கவை! ஆளனைப் பறிக்க வந்த அழகு மயிலே! ஆனந்தமாகப் பாடு—நானும், சங்கவையும்—அதோடு கபிலரும் இங்கிருந்து போய் விடுகிறோம், இன்பகானம் எழுப்புங்கள்!"

"பூங்கொடி—பொல்லாதவளே! மூடு வாயை!" அங்கவை கதறினாள்.

"அடி பழிகாரி!" புலவன் உரத்த குரலில் கூவினான்.

சினங்கொண்ட பெண்புலி போல் பூங்கொடி எழுந்து நின்றாள்.

புலவனின் கண்களிலே நீர் ததும்பிற்று.

"'அற்றைத்திங்களில்' என்ன தவறு கண்டாய்"

"என்னை ஒற்றைத்திங்களாக்கும் சூது கண்டேன்!"

அங்கவை எழுந்து அருகில் வந்தாள்.

"பூங்கொடி!" அவள் குரலில் கோபம் கொந்தளித்தது.

"என்ன நினைத்துக்கொண்டு பேசினாய்!"

"தேன் குடித்தேன்!" பூங்கொடி குத்திக் காட்டினாள்!

"பூ நாகமே......!" அங்கவை அலறினாள்.

"இங்கேயே இருங்கள் இன்பகானம் பொழியுங்கள்!" இன்னொரு குத்தீட்டி.

வேதனை தாளாது அங்கவை விழிகளை மூடினாள்.

"இரவு பாடினாயே—அற்றைத்திங்கள் அதைப்பாடு!" நேரடியாகவே கேட்டாள்!

"அடி பாதகி—இருட் குழியில் எப்போது வீழ்ந்தாய்"

"தங்கையைக்கூட விட்டுவிட்டு தனிவழிக்கு என் துணைவிளக்கை தூக்கிச் சென்றாயே அப்போது" பூங்கொடி ஆத்திரத்தைக் கக்கினாள்.

"பூங்கொடி!" புலவன் பேரிடி போல் கத்தினான்.

சங்கவை எழுந்து வந்தாள். ஆமக்கா! அன்றிரவு நீ வெளியே போய் இருந்தாயே — அப்போது புலவனும் அவள் அருகில் இல்லையாம்!

"ஏய் புலவனே—உண்மையைச் சொல்—செத்துவிடுவாய்!" அங்கவை சீறினாள்.

"ஆம்! அன்றிரவு மலை விளிம்பில் அமர்ந்தபடி "அற்றைத்திங்கள்" என்று இதயத்தைப் பிழிந்து பொழிந்தீர்களே, தமிழமுது. அதைக்கேட்டு எழுந்துவந்தேன். இந்தமேடையிலே அமர்ந்த வண்ணம் கேட்டேன். கசிந்துருகினேன்."

"உன்னை நான் பார்க்கவில்லையே?"

"நானும் உங்களைப் பார்த்ததில்லையே!"

"கேளடி பூங்கொடி! 'களங்கம்' தவிர வேறெதையும் கேட்டறியா மாதரசி பாடுகிறேன் கேள்!

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" எடுத்த எடுப்பிலேயே மேல் கட்டம்!

"எந்தையும் உடையேம் எம் குன்றும்
பிறர் கொளார்
இன்றைத்திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார் யாம்
எந்தையும் இலமே!"

இதயம் கெட்டவளே! இன்ப கீதமா இது! இருண்டுவிட்ட என் இதயத்தின் குமுறல்! எங்கள் நிலவிளக்கும் கண்ணாடி! கொடுத்தே கெட்ட என் தாய்த்திருநாட்டின் அனல் மூச்சு! சுந்தர நிலவொளியில் என் தந்தையோடு உலவிய சுதந்திர நாட்களை எண்ணி அழுதேன்—அது உன் ஆளனுக்கு நான் விடுத்த தூதாக உனக்குப் பட்டதா? அடி பாதகி!

உள்ளக் குமுறல் — உன் அடைத்துவிட்ட செவிகளுக்கு உப்பரிகைச் சங்கீதமாகக் கேட்டதா? உரிமைக் கீதம்—உனக்கு உல்லாச நாதம்! மோக வீணையை மூட்டியறியேனடி நான்! சோகம்! சோகம்! நீங்காத சோகமடி! என் வாழ்க்கையே பெரிய சோகம்! சதிகாரி! உன் பெரும் பழியைச் சுமக்கத்தான் சாவு என்னை விழுங்காமல் விட்டுவைத்ததா! புண்ணில் சரம் தொடுத்தாய்—பூவையென் பெண்மைக்குக் களங்கம் கற்பித்தாய்" அங்கவை பேசினாள்.

"தாயே! என்னை மன்னித்துவிடு—என்னை மன்னித்துவிடு!" பூங்கொடி கதறியழுதாள்!

அங்கவை அசையாத நிலை பெற்றாள்.

* * *

"அத்தான்! அத்தான்!"

புலவனைக் காணவில்லை!

திரும்பிப் பார்த்தாள்; காட்டு வெள்ளம்போல் புலவன் கண்மண் தெரியாமல் ஓடினான்!

"அத்தான்! அத்தான்!" பூங்கொடி கூவினாள்!

அவன் திரும்பவில்லை;

"அண்ணா! அண்ணா!!" அங்கவையின் கூக்குரல்!

அப்பப்பா! அந்த வார்த்தைகளுக்குத்தான் எத்தனை சக்தி!

புலவன் திரும்பி வந்தான்!

பூங்கொடி அவன் கால்களில் விழுந்து கண்ணீர் சொரிந்தாள். அந்தக் கண்ணீர் களங்கத்தை கழுவிக்கொண்டு ஓடிற்று!!

★

"நீங்கள் என்னுடைய புத்தகத்தை—நாலைச் சில மணி நேரங்களில் படித்துவிடுவீர்கள். ஆனால் அதற்காக நான் எடுத்துக்கொண்ட முயற்சியானது என்னுடைய தலைமயிரையே நரைக்கும்படி செய்துவிட்டது." —மாண்டெக்யூ

# "என் குரல்"

[ ஒரு ஆசிரியர் ]

—பழநி—

நான் ஒரு ஆசிரியன்! என்னிடம் படித்த மாணவன் ஒருவனை அண்மையில் காண நேர்ந்தது. அவன் என்னைப் பார்த்துக் கேட்டான்:—

"ஏன் சார்! எங்கே இருக்கிறீர்கள்!"

நான் வேலை செய்யுமிடத்தைக் குறிப்பிட்டேன்.

"என்ன சம்பளம்?"

இந்தச் சொல் அவன் வாயிலிருந்து வந்ததும் நான் அயர்ந்து போனேன்; வெட்கப்பட்டேன்; சினமும் கொண்டேன். அவன் இதைக் கவனியாததுபோல் மேலே சொன்னான்;

"எல்லாம் சேர்ந்து எனக்கு நூற்று முப்பது வருது சார்! நீங்க என்ன வாங்குகின்றீர்கள்?"

மறுபடியும் கேட்டான். என் ஊதியத்தைக் கூறினேன். அவன் உதடு பிதுங்கியது.

"இவ்வளவுதானா? சார்! நான் இப்பத்தான் வேலைக்குப் போனேன்! உங்களுக்கு அதிகமாக இருக்கும்னு நினைச்சேன்! ஐயையே."

இவ்வளவுதானா? ஐயையே!

நெஞ்சைச் சுண்டி இழுத்தது. 'இவ்வளவுதானா?'

எவ்வளவு அலட்சியம். ஐயையே எவ்வளவு இழிவுடன் பிறக்கிறது! ஐயா! கேட்டீரா? இவ்வளவு தானா? 'ஐயையே'

இதை அவன் கேட்ட பல நாட்களுக்குப் பின்னும் — உறக்கத்திலும்—முன் வந்து நிற்கிறது! கிழிந்த சட்டையை எடுத்துக் கொண்டு அந்தத் துவாரத்தினை பார்க்கிறேன். அந்தக் கிழிந்த சட்டையின் வழியே என் கண்கள் உலகத்தைப் பார்கின்றதையா! பார்க்கிறது! மாணவ உலகத்தின் மாண்பு தெரிகிறது. கிழிசலின் வழியே மளிகைக்கடை, துணிக்கடை, விறகுக்கடை, பால்— இவற்றின் முதலாளிகள் இருக்கின்றார்களே — அவர்களின் உருவங்கள் தெரிகின்றன! எங்கே பணம்?

ஐயா! ஆட்சியாளரே உங்களுக்குத் தெரிகின்றதா? எமது கிழிந்த சட்டை. எப்படித் தெரியும்! உங்கள் சட்டையில் 'கிழிசல்' ஏது?

என்னிடம் ஏறத்தாழ நான்கு ஆண்டுகளுக்கு முன் படித்த மாணவன் தன் அரைகுறை படிப்பில்—நான்காம் படிவத்திலேயே மூன்றாண்டுகள் தங்கி, இனி நடக்கும் கல்விக்கும் தொடர்பு விட்டவன்—என்னைவிட, ஒன்றிரண்டல்ல, நாற்பது ரூபாய் அதிகமாக வாங்குகின்றான்! ஒரு மாணவன் மூன்றாம் படிவம் படித்தவன். அஞ்சலகத்தில் வேலை பார்க்கத் தொடங்கினான். அவன் இப்போது என் சம்பளம் வாங்குகின்றான்!

இன்னொருத்தன்! அவன் நான்காம் படிவம் பயின்றான்! வாங்குவது நூற்று இருபது ரூபாய்! இப்படி எத்தனையோ எடுத்துக் காட்டுகளை நான் காட்டக்கூடும்! ஆனால் பயன்?

என்னிடம் படித்த மாணவன் என்னிலும் அதிகமாகப் படித்து விட்டு நல்ல வேலையிலிருப்பதை நான் குறிப்பிட்டுப்பேச வரவில்லை.

ஒரு ஆசிரியராகப் பதவி ஏற்க எத்தகைய தகுதி வேண்டும்?

பள்ளியிறுதி (எஸ். எஸ். எல். சி)த் தேர்வு பயின்ற ஒருவர் மேலும் இரண்டாண்டுகள் பயில வேண்டும்!

தேர்வில் வெற்றி பெற்று பின் எப்படியோ பிடிக்காதவர்களையெல்லாம் பிடித்து ஆசிரியாராக வந்தால் சம்பளம் என்ன? நாற்பத்தைந்து அடிப்படை! (ஜில்லா போர்டுகளில்) மாவட்ட ஆட்சிக்குட்பட்ட பள்ளிகளில் நாற்பது! ஒரே தகுதியுடைய இரண்டு ஆசிரியர்கள் ஒருவர் உயர்நிலைப் பள்ளியிலும், தொடக்கப்பள்ளியிலும் இருந்தால் வெவ்வேறு சம்பளங்கள்!

ஒரே தகுதி! ஒரே நிலை!

ஆனால் இடங்கள் வேறு! அவ்வளவே!

சம்பளம் வேறு! வேறு!
என்ன காரணம்?

இனித் தாய்மொழி கற்பிக்கும் ஒரு தமிழாசிரியர் நிலை இருக்கிறதே, அது வருணிக்கின்ற நிலையிலா இருக்கின்றது?

அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியங்களின் விளக்கத்தைச் சொல்லத்தானே வேண்டும்!

வித்துவான் அல்லது புலவர் பட்டம் பெற்ற ஒரு தமிழாசிரியர் மூன்றாந்தரத் தமிழாசிரியர்.

வித்துவான் பட்டத்தோடு ஆசிரியப் பயிற்சி பெற்றவர் இரண்டாந்தரத் தமிழாசிரியர்!

வித்துவான் பட்டத்தோடு பள்ளியிறுதித் தேர்வுத் தகுதியும் (எஸ். எஸ். எல். சி. நற்சான்றிதழ்) கொண்டு ஆசிரியப் பயிற்சியும் பெற்றவர் முதல்தரமானவர் — அதாவது வேலைக்கு வைத்துக் கொள்கிறவர் விருப்பப்பட்டால்!

'வேலைக்கு வைத்துக்கொள்கிறவர் விருப்பப்பட்டால்' என்பதன் விளக்கத்தைக் கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்.

முதல்தரமான தமிழாசிரியர் என்பாருக்கு மூன்றாந்தரத் தமிழாசிரியருக்குக் கொடுக்கும் ஊதியம் தரலாம். நாற்பதோ அல்லது நாற்பத்தைந்தோ! இரண்டாந்தரமானவர் என்பாரையும் இப்படியே நாற்பதோ நாற்பத்தைந்தோ கொடுத்துவைத்துக் கொள்ளலாம் இவ்விரண்டுபேர்களே இப்படியென்றால் மூன்றாந்

தரமானவர் என்ன கதி என்பதைக் கூறவேண்டுமா? தமிழாசிரியர்களுக்குப் பலவிதமான சம்பளங்கள் வேண்டுமா? நாற்பது ரூபாய் (2) நாற்பத்தைந்து ரூபாய் (3) ஐம்பது ரூபாய் (4) அறுபது ரூபாய் (5) அறுபத்தைந்து ரூபாய் (6) எழுபத்தைந்துரூபாய் (7) எண்பத்தைந்து ரூபாய்.

சங்கத்தால் வளர்ந்த தமிழ்—தண்டமிழ்ப் புலவரால் வளர்ந்த தமிழ் — கொண்டு வாழும் பெரியீர்! இத்துணைவகையா? வேறு எந்த ஆசிரியருக்குமில்லாத நிலையிலே தண்டமிழ் ஆசிரியர்கள் தவிப்பதா? தமிழில் ஆட்சி நடத்தப்போகும் தமிழ் — அமைச்சர்கள் கவனிப்பார்களா? ஊதியத்தை நினைத்தவர் நினைத்தபடி தர இடங்கொடுக்கும் இந்நிலை போக்க வருவார்களா?

இனித் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் படும்பாடு கேவலம்! எல்லாம் சேர்ந்து ஐம்பதுரூபாய்க்குள்ளேயே அவதிப்படும் அவர்களைப்பற்றி ஒன்றா, இரண்டா கூற? அமைச்சர்கள்மட்டும் அறியமாட்டார்!

இத்தகைய ஆசிரியர்கள் வருங்கால சமுதாயத்தை உருவாக்க முடியுமா? சிந்தனைச் சிற்பிகளை, வண்ண வண்ண ஓவியங்கள் புனை கவிஞர்களைக் கற்பிக்க முடியுமா? பாலையிலா பசுஞ்சோலை?

பாண்டியன் பொன்னால்—பைந்தமிழாயிற்று!

சேரன் செழிப்பால் செந்தமிழாயிற்று!

சோழன் சோற்றால் துள்ளு தமிழாயிற்று!

ஆதரவில்லாமலா தமிழ் வளர்ந்தது? சொல்லமுடியுமா? வேறு எந்த நாட்டிலாவது உண்டா?

நீரின்றிச் செடி வளருமா?

மூன்றாம் படிவம், நான்காம் படிவம் படித்தான், தன்னிலும் ஊதியம் வாங்கப் பார்க்கும் ஆசிரியன், அதன்மேல் ஐந்து அல்லது நான்கு ஆண்டுகளை வீணடித்துக் கற்றுவிட்டுக் குறைந்த ஊதியம் வாங்குகிறான் என்றெண்ணும் ஆசிரியன், அறிவில்லாமல் அதிகமாகப் படித்ததற்குத் தண்டனையோ என எண்ணும் ஏழையின், எண்ணம் ஒழுங்கான தண்டவாளத்திலா ஓடும்? 'அரியலூர் அழகைப்' பெறாது என்பதைத் திட்டமாகக் கூற இயலுமா?

எஸ். எஸ். எல். சி. கற்றவன் ஒரு எழுத்தாளனாகப் (கிளார்க்காக) போகிறான் என்றால் அவன் வாங்கும் ஊதியம் நாற்பத்தைந்தே! ஆனால் அதே ஊதியம் வாங்கும் ஆசிரியன் எஸ். எஸ். எல். சி.-க்குப் பின் இரண்டாண்டு படிக்கிறான்! படிப்புக்கு மதிப்பா என்பது ஒருபுறமிருக்கட்டும், நாற்பத்தைந்து வாங்கும் (கிளார்க்) எழுத்தாளன் வாழும் வாழ்க்கையும்! ஆனால் அதே ஊதியம் வாங்கும் ஆசிரியன் வாழ்க்கையும்? ஏன் இந்த வேறுபாடு? இதை எண்ணும்போது அதன் உண்மை புலப்படும்! இதே தகுதியுடையான் மத்திய அரசாங்கத்தின் பணியாளனாக இருந்தால் அவன் பெறும் பெருமையும், உயர்வும் வேறு !!

நீண்ட காலமாகவே இதைக் கேட்டு வருகிறார்கள்! நீண்ட நாளாகவே அரசாங்கத்தாரும் கருணை கூர்கிறார்கள்! மேலும் மற்ற அலுவல் பார்ப்போர் பல விதமான சலுகைகள் பெறுகிறார்கள்! வீட்டு வாடகைச் சலுகை (அலவன்ஸ்!) நகரச் சலுகை (அலவன்ஸ்) முதலியன! இவற்றில் எதையும் ஆசிரியர்கள் பெறுவதில்லை! வெட்கக் கேடு! பல்முறை வற்புறுத்தியும் கேட்டும் வந்தபோது ஒரு ரூபாயும் தந்தாரில்லை! ஆனால் 'தேர்தல் அவசர கோலத்தின்'போது மற்ற என். ஜி. ஓ.-க்களுக்கு ஐந்தும், ஏழும் தந்தார்கள். இதில் சட்டமன்றத்தில் நிதியமைச்சர் ஆசிரியர்களுக்கும் உண்டு என்றார்! ஆனால் முறைப்படி இற்றுப் போவதாயிருந்தது! ஆசிரியக் குழு சார்பில் இதை எடுத்துரைத்துப் பின் மனமிரங்கித் தந்தார் அமைச்சர்! இந்த ஐந்தும் ஏழும் ஆசிரியர்கள் மட்டும் நடத்திய போராட்டமாக இருந்திருந்தால் நிச்சயமாகத் தந்திரார்! ஐயமில்லை!

“ஆசிரியர்களுக்கு நெடிய விடுமுறைக் காலம் உளது. ஆகையால் சம்பளம் குறைவு!” இப்படிச் சிலர் வாதிக்கின்றனர்.

சிந்தனைக் குதிரையைத் தட்டி அறிவுக்கு வேலை தரும் யாரும் இந்தப் பதிலை ஏற்றுக்கொள்ளார். ஏனென்றால் அறிவுக்கு வேலை தருவோருக்கு நிறைந்த ஓய்வு தேவை என்பதை அன்னார் அறிவர்! எழுதுகின்றார்களே, கதை, கட்டுரை, கவிதை - அவர்கள் எவ்வளவு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியுளது! மூன்று மணி, இரண்டு மணி எழுதியோர் உடலில் பெருத்த ஆற்றலை இழந்துவிட்டதாக உணரவில்லையா?

சிந்தையைத் தொழிற்படுத்தும் தொழிலாளிக்கு ஓய்வு தேவை என்பதை இன்னும் எடுத்துக் கூறவேண்டுமா?

எழுத்தறிவித்தவன் இறைவன்! மாதா பிதா குரு தெய்வம்!

தெரியும் அனைவருக்கும்! தெரிந்ததுபோலவே ஒருகாலத்தில் எல்லோரும் பேசினார்கள்!

ஒரு 'கிளார்க்' தன்னைக் கிளார்க் என்று சொல்லப் பெருமைப்படுகிறான்! 'காரோட்டி' என்பதில் மகிழ்ச்சியடைகிறான் மற்றொருத்தன்! ஏன்? தபால் கொண்டு வருபவனும், புகைவண்டிநிலைய வேலைக்காரனும் (பாயிண்ட்ஸ்மேன்) கூடத் தங்கள் பதவிகளைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள முடிகிறதே! புகைவண்டித் தொழிற்சாலையில் உள்ள கூலி (கலாசி) கூடத் தன்னைப் பெருமையோடு சொல்லிக் கொள்ளுகிறானே! ஆனால் ஒரு ஆசிரியன் தன்னை ஆசிரியன் என்று சொல்லிக்கொள்ள முடியவில்லையே தாழ்வுணர்ச்சியில்லாமல்!

'வாத்தியாரா?' கேட்கின்றார்களே, இப்படி! இப்படி இழிவோடு கேட்கக் காரணம் என்ன? பணமன்றி வேறென்ன !!

'அல்லற் பட்டாற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை'

*

“இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்.”

★




சென்ற ஆகஸ்டு மாதம் 23-ம் நாள் ருமேனியா தன்னுடைய தேசியத் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடியது.

“சிறிய” நாடுகளில் ஒன்றுதான் ருமேனியா. நாம் பாடுபடும் பாங்கான திராவிடத்தின் நிலப்பரப்பு, மக்கட் தொகை இவற்றை விடச்சிறியது!! இருந்தும் இன்பத்துடனும், இணையிலா மகிழ்ச்சியுடனும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கிறது ருமேனியா.

ருமேனியாவின் மக்கட் தொகை 1 கோடி 75 இலட்சம். அதில் 1½ கோடி பேர்கள் ருமேனியர்கள். மற்றவர்கள் மீதியுள்ள இனத்தினரும் குறிப்பாக “மக்யர்ஸ்” எனப்படும் வகுப்பினரும். ஐரோப்பாவின் மக்கட் தொகையிலேயே ருமேனியா எட்டாவதாக நிற்கிறது. ருமேனியர்வின் நிலப்பரப்பு 237,500 சதுர கிலோ மீட்டர்கள்—அதாவது 144,000 சதுர மைல்கள். ஐரோப்பாவின் நடுத்தர நிலப்பரப்பு நாடுகளின் பட்டியலிலே ருமேனியா வருகிறது.

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில்தான் ருமேனியா அமைந்துள்ளது. அதன் வடக்கிலே சோவியத் ரஷ்யாவும், மேற்கிலே அங்கேரியும், தென்மேற்கிலே யுகோஸ்லேவியாவும், தெற்கிலே பல்கேரியாவும், கிழக்கிலே இயற்கை எல்லையாக அமைந்த கறுப்புக் கடலும் அமைந்துள்ளன.

ருமேனியாவின் தலைநகராக புகாரெஸ்ட் உள்ளது. மற்றும் ஜாஸ்ஸி, குளுஜ், ஓராசுல், டிமிசொரா, கான்ஸ்டென்ஜா போன்ற முக்கிய நகரங்கள் உள்ளன. ஜாஸ்ஸி பழைய கலாச்சாரத்தின் மையமான நகரம். குளுஜ் பல்கலைக் கழகங்களின் இருப்பிடம். ஓராசுல் ஸ்டாலின் தொழில் மையமான நகரம். கான்ஸ்டென்ஜா கறுப்புக் கடலில் இருக்கும் துறைமுகம்.

ருமேனியாவின் முக்கிய வளமாக எண்ணெய் உள்ளது. மற்றும் இயற்கை வாயுக்கள் உண்டு. நிலக்கரி, கல்உப்பு இவைகளும் ஏராளமாக இருக்கின்றன.

* * *

ருமேனியா பொருளாதாரத் துறையிலே மிகவும் பின்தங்கிய ஐரோப்பிய நாடுகளில் ஒன்ருகக் கருதப்பட்டு வந்தது. முன்னேருத தொழில் துறைகள் எல்லாம் அன்னியர்களின் கையில் இருந்தன. அதனுடைய உழவுத் தொழிலும் பழைய பத்தாம் பசலி முறையில் இருந்தது. ருமேனியாவின் நிலக்கரி, பாக்சைட், செம்பு, பாதரசம், குரோமியம், மாங்கனீஸ், எண்ணெய், கட்டை முதலிய வளமுள்ள செல்வங்கள் டாலர்களாக, பவுன்களாக, பிராங்குகளாக மாறி அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு நாடுகளில் சென்று பதுங்கின. அந்த முறையிலே ருமேனியா மேற்கு நாடுகளுக்கு பொருளாதாரத் துறையிலே அடிமைப்பட்டுக் கிடந்தது. பொருளாதாரத் துறையிலே அடிமைப்பட்டுக் கிடப்பதால் சமுதாயத் துறையிலே ஏற்றங் கிடையாது அல்லவா? அதே போன்றுதான் அரசியல் துறையிலும்.

ஒரு காலத்தில் ருமேனியாவின் பொருளாதாரம் பின்தங்கியது என்று கூறப்பட்டது. ஆனால் அதே ருமேனியாதான் இன்று உலக சந்தையில் உயர்ந்த நாடுகளுடன் சில குறிப்பிட்ட பொருள்களில் போட்டி போட்டுக்கொண்டு விற்பனை செய்கிறது.

முன்பு ருமேனியா 99% தொழில் இயந்திரங்கள் இறக்குமதி செய்துக்கொண்டிருந்தது. இன்று தன்னுடைய சொந்த தொழிலினின்றே ஏறக்குறைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொண்டு விடுகின்றது. உழவுத் தொழிலுக்கு, எண்ணெய் ஆலைகளுக்கு, சுரங்கத் தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களை, சாமான்களை அதுவே உற்பத்தி செய்துகொள்கிறது. எதற்கும் அந்நிய நாட்டிடம் கையேந்தி நிற்கும் நிலைக்கு இல்லை அது.

பொருளாதாரத் துறையிலே ஏற்பட்ட மகத்தான வளர்ச்சியும், முன்னேற்றமும் ருமேனியாவின் தேசிய வருமானத்தை உயர்த்தியிருக்கிறது. 1938-ல் இருந்ததை விட இப்போது இருமடங்கு அதிகமாக இருக்கிறது தேசிய வருமானம்.

ருமேனியரின் சரித்திரம் மிகவும் பரிதாபகரமானது. மக்களின் குடியேற்றமும், நானூறு ஆண்டு துருக்கியரின் ஆட்சியும், வெளிநாட்டு முதலும் மக்களின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதித்தன.

பொருளாதார பின்னேற்ற மட்டுமன்றி மக்களுக்கு அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டு வந்தனர். பெரும் தியாகங்கள் செய்துதான் ருமேனியர்களால் சுதந்திரமும், உரிமையும் பெற முடிந்தது.

ஆகஸ்டுத் திங்கள் 23-ம் நாள் 1944-ஆம் ஆண்டு பாசிச ஆதிக்கத்தை நொறுக்கி மார்ச் 6-ம்நாள் 1945-ம் ஆண்டு சோவியத் படையின் வெற்றிகரமான முன்னேற்றமும் பொதுமக்களின் நடவடிக்கைகளும்தான் ஜனநாயகம் மலருவதற்கு உதவிசெய்தது என்று ருமேனியர்கள் கூறுகின்றனர்.

ருமேனியாவின் மக்கட்தொகை சிறியதாக இருந்தாலும் அதில் பதினைந்து வகை தேசிய இனங்கள் இருக்கின்றன. அவற்றில்

முக்கியமானவைகள்: அங்கேரியர்கள், ஜெர்மனியர்கள், யூதர்கள், ரஷ்யர்கள், சொபியர்கள்.

ருமேனியாவின் மொழி லத்தீனை தாயாகக்கொண்டது. அது இத்தாலி, பிரென்ச்சு, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளைச் சார்ந்தது. அது எழுதும் வகை இலத்தினைச் சார்ந்தது.

அந்நாட்டு அரசியல் சட்டப்படி மக்களுக்கு மனச்சாட்சி சுதந்திரமும், மத உரிமையும் வழங்கப்பட்டுள்ளது. மத உரிமை வெறும் ஏட்டளவில் மட்டுமின்றி செய்கையிலும் நடத்த அரசாங்கமே முன் வந்துள்ளது.

ஏழு ஆண்டுகளில் மட்டும் ருமேனியாவின் தொழில் 3.4 மடங்கு வளர்ந்துள்ளது. முன்பு பெட்ரோல் துறையில் 91·9 %, மின்சார, வாயு தொழில்களில் 95 %, உருக்குத் தொழிற்சாலைகளில் 74 %, கெமிகல் தொழிலில் 72 % அந்நியரின் ஆதிக்கத்தில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்ற நான்கு ஆண்டுகளில் மட்டும் உழவுத் தொழிலில் இயந்திரங்கள் பெருகியவிதம்:- 10,000 டிராக்டர்கள், 6,000 விதைக்கும் இயந்திரங்கள், 5,000 அறுவடை இயந்திரங்கள், 5,000 கதிரடிக்கும் இயந்திரங்கள்.

கடந்த 18-மாதங்களில் மட்டும் 4,364 புத்தகங்கள் 55 மில்லியன் பிரதிகள் அச்சிடப்பட்டன. போருக்கு முன் 10 தியேட்டர்களும், ஒரே ஒரு 'பில் ஆர்மோனிக்' ஆர்க்கெஸ்ட்ராவும் இருந்தன. இப்பொழுது 35 நாடக தியேட்டர்கள், 5 ஒபெரா தியேட்டர்கள், 20 பொம்மலாட்டத் தியேட்டர்கள், 19 பில்ஆர்மோனின் ஆர்க்கெஸ்ட்ராக்கள் இருக்கின்றன. அங்கு 10-இலட்சத்துக்கு மேற்பட்ட கலைஞர்கள் இருக்கின்றனர்.

கூலி அங்கு உயர்ந்துகொண்டேசெல்கிறது. 1950ஐவிட 1955-ல் கூலி 28% அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. வருகிற 1960-ல் 1955 விட 30% அதிகமாக கூலி உயர்த்தப்படும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.

போருக்கு முன்பு அங்கு 2,200 ஆட்களுக்கு ஒரு மருத்துவர் வீதம் இருந்தனர். இப்பொழுது 800-பேர்களுக்கு ஒரு மருத்துவர் வீதம் இருக்கின்றனர்.

படிக்காதவர்கள் தொகை அங்கு ஏறக்குறைய இல்லை என்ற அளவுக்கு கல்வி பரவியிருக்கிறது. இது ஒரு சாதாரணமான விஷயமல்ல. ஏனென்றால் 13-ஆண்டுகட்கு முன்னர் கிராம மக்கட் தொகையில் முக்கால் பங்கு பேர்களுக்கு மேல் எழுத, படிக்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். 1952 - 56ல் 119,000 உழவர்கள், தொழிலாளர்களின் பிள்ளைகள் பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டம் பெற்றனர். அங்கு 42 பல்கலைக் கழகங்கள் உள்ளன. அங்கு 80,000 மாணவர்கட்குமேல் படிக்கின்றனர்.

சிறிய நாடு என்று கதைக்கும் கனவான்கள் கண்திறந்து ருமேனியாவை நோக்கட்டும். கீரைப் பாத்தி நாடாக, சிறிய நாடாக இருக்கும் ருமேனியாதான் இன்று எல்லாத் துறையிலும் சுபீட்சமாக தனித்து இயங்கக்கூடிய நிலையில் இருக்கின்றது.

ஆனால் பெரிய நாடு என்று கூறப்படும் இந்தியத் துணைக்கண்டத்தில் — வெளிநாடுகளில் கடன் பிச்சை, உள்நாட்டில் பஞ்சம், பட்டினி, ஏற்றத் தாழ்வு, பேதம், கல்வியில்லாமை இன்னும் எல்லாத் துறையிலும் பின்தங்கிய நிலைமையே காண்கிறது !!

# அந்த விளக்கு !

"நல்லெண்ணமும் நடத்தையும்" என்ற நூலுக்குக் கோவையொன்றை திரு முகுல்பாய் கலார்த்தி குஜராத்தி மொழியில் எழுதியுள்ளார். இந்திய அரசாங்கம் அதற்கு ஆயிரம் ரூபாய் பரிசளித்துப் பாராட்டியிருக்கிறது. அந்நூலில் வரும் சித்தனைக் குரிய நிகழ்ச்சியொன்று இது:-

இஸ்லாமின் நாலாவது காலிப் அசரத் அலி. அவரிடம்தான் அரசாங்கப் பணமெல்லாம் இருக்கும்.

ஒரு தடவை; அப்பணத்தை அவர் எண்ணிக்கொண்டிருந்தார். அது மாலை நேரம்; எனவே கொஞ்சநேரத்தில் இருள் சூழ்ந்து கொண்டது. ஒரு மெழுகுவர்த்தியைப் பற்றவைத்தார். பின்னர் தொடர்ந்து பணத்தை எண்ண ஆரம்பித்தார்.

கொஞ்சநேரம் கழிந்தது. அப்போது இரண்டு அதிகாரிகள் வந்தனர். 'சொந்த' விஷயமாக காலிப் புடன் பேச வந்தனர். அவர்களைப் பார்த்த காலிப் கொஞ்சநேரம் வெளியே காத்திருக்கச் சொன்னர்.

பணத்தை எண்ணி முடித்தவுடனே பக்கத்திலிருந்த மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டார். பின்னர் வேறொரு மெழுகு வர்த்தியைப் பற்றவைத்தார். அதைத்தன் பக்கத்தில் வைத்துக்கொண்டார். பிறகு அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேச ஆரம்பித்தார்.

காலிப்பினுடைய செயலைக் கண்ட அதிகாரிகள் வியந்தனர். "முதலிலேயே ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதை ஏன் அணைத்துவிட்டு புதிதாக ஒன்றைப் பற்றவைத்தார்?" என்று தங்களுக்குள்ளேயே கேட்டுக்கொண்டனர்.

பேச்சு முடிந்தது. தாங்க முடியாத வியப்பால் அதிகாரிகளில் ஒருவர், "தவத்திரு அசரத் அவர்களே! தங்களுடைய செயலின் பொருள் தெரியாமல் தவிக்கிறோம். நாங்கள் வரும்போது ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. எங்களுடன் பேச ஆரம்பிக்கும்போது, அந்த விளக்கை அணைத்துவிட்டு, வேறொன்றைப் பற்றவைத்தீர்கள். இச் செயலை தயைகூர்ந்து விளக்க வேண்டுகிறோம்" என்று பணிவாகக் கேட்டார்.

"ஓ! அதைக் கேட்கிறீர்களா! நீங்கள் வரும்போது நான் அரசாங்கத்தின் வேலையைச்செய்துகொண்டிருந்தேன். அப்போது எரிந்துகொண்டிருந்த விளக்கு அரசாங்க செலவில் எரிந்துகொண்டிருந்தது. பின்னர் நம் சொந்த வேலையைத் துவக்கினோம். இதற்குப் பிறகு அந்த விளக்கு எரியலாமா? அப்படி 'அரசாங்க விளக்கை' என் சொந்த வேலைக்குப் பயன்படுத்தினால் நான் ஒரு திருடனும், அயோக்கியனுமாவேன். ஆகவே தான் அந்த விளக்கை அணைத்தேன். என் சொந்த வேலைக்காக வேறொரு விளக்கைப் பற்றவைத்தேன்" என்று விளக்கினர் அசரத்.

இதைக் கேட்ட அதிகாரிகள் அசரத்தைப் புகழ்ந்துகொண்டும் வாழ்த்திக்கொண்டும் வீடு திரும்பினர்.

—[கி. ]

4-ம் பக்கத் தொடர்ச்சி

இதன் மூலம், காமராசரின் முகவிலாசப் பெருமையை நிலைநாட்ட முனைந்தார், தோழர் சுப்ரமணியம். பெரியார்தான் கொண்டாடினாரே. இந்தப் 'பெரியவர்கள்', ஏன் அவரது புகழ்ச் சொற்களையும், அவர்தம் கழகத்தவர் அணிவித்த மாலைகளையும் வாழ்த்துரைகளையும், மறுக்காது ஏற்றனர்? என்ன காரணம், புன்சிரிப்பும் அகமலர்ச்சியும் அப்போது காட்டியதற்கு? "வேண்டாம் உம் உதவி," என்று சொல்லியிருக்கலாமே, தேர்தல்சமயத்தில். திராவிட கழகத்தாருடன் சேர்ந்து தேர்தல் வேலை செய்யாதீர், என்று கட்டளை பிறப்பித்திருக்கலாமே காங்கிரஸ் கமிட்டிகளுக்கு. ஆபத்தைக் கடக்க, எந்தப் பாலம் கிடைத்தாலும் போதுமென்று எண்ணினர் அன்று! கொள்கையைவிட பதவி, இனித்தது!! இப்போது, பெருமையோதச் சொல்கிறார், காமராசர், சுப்ரமணியத்தை விட்டு. இவர், போகவில்லையாம்— அவராகவே வந்து ஆரத் தழுவி, ஆதரவைத் தந்தாராம்!!

கடந்த கிழமைதான், பெரியாரைக் கைது செய்து, வழக்கும் தொடர்ந்திருக்கிறது காமராஜ் அரசு. இந்தக் கிழமை, அவரது நடவடிக்கையைத் தடைசெய்வதற்காகச் சட்டமும் கொண்டுவந்து, சரமாரியான கண்டனக் கணைகளையும் பூட்டியிருக்கிறது.

அரசியல் சட்டத்தைக் கொளுத்துவதும், காந்தி படத்தை எரிப்பதும், விநாயகர் இராமர் சிலைகளை உடைப்பதும், பெரியார் தனது அதிருப்தியைக் காட்டிக்கொள்ளும் வகையில் செய்திடும் காரியங்களே ஒழிய வேறில்லை. அந்த 'அதிருப்தி' இன்னதென அறியும் வாய்ப்பிருந்தும் காமராசர் அதை நழுவவிட்டு, ஏனிப்படி, ஒரு அவமானகரமான சட்டத்தை உருவாக்கவேண்டும் என்பதுதான் நமது கேள்வி. பெரியார் பிள்ளையாரை உடைத்தபோதும், இராமர் சிலைகளை உடைத்தபோதும், அலட்சியம் காட்டியதுபோல, ஏன் இப்போதும் காட்டக்கூடாது? அவர், அவைகளை உடைத்ததால், பக்தியும் பஜனைச் சப்தமும் "வளர்ந்ததே ஒழிய, குறையவில்லை," என்று இத்தாப்புப் பேசிக் கொண்டவர்கள், "உத்தமர் காந்தியாரின் படத்தைக் கொளுத்தியதால், அவர் புகழ்தான் பெருகிற்று? அரசியல் சட்டத்தை அவர் கொளுத்தத்துவங்கியதால்தான், ஒவ்வொருவர் கையிலும் அது இப்போது இருக்கிறது," என்று கூறிப் பெருமை கொள்ளலாமே!! அதை விட்டு, ஏனிப்படியொரு சட்டம் செய்யவேண்டும்?

இதனால்தான் சட்டசபையில், தி.மு.க. சார்பில்,

**"உங்கள் யூகம் மங்கிவிட்டது,"**

**"நீங்கள் இராசதந்திரத்தைக் காட்டத் தவறுகிறீர்கள்."**

**"நிலைமையை மோசமாக்குகிறீர்கள்,"**

என்று ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது.

சட்டம் செய்வதில் காட்டிய அவசரம், பெரியாரைச் சந்தித்து, சாதி ஒழிப்பு குறித்து அவர்தரும் யோசனைகளைக் கேட்டு நடப்பதற்குப் பயன்படுத்தியிருந்தால், எவ்வளவோ நன்றாகயிருந்திருக்கும். பெரியார் தரும் யோசனைகளையாவது நாடு தெரிந்திருக்கும்!! காமராசர், அந்தப் பாதையில் செல்ல விரும்பவில்லை! ஏனெனில், இப்போது தேர்தல் இல்லை!!

**ஒரு சார்பினரை விரட்டிடவேண்டும் என்பதிலோ, பலாத்கார மூலம்தான் புது உலகம் உருவாக்கமுடியும் என்பதிலோ, நம்பிக்கைகொண்டவர்களல்ல நாம். திராவிட முன்னேற்றக் கழகம், இதனைப் பல தடவைகளில் வெளிப்படுத்தியிருக்கிறது என்பதோடு, வளரும் உலகில், பேத உணர்ச்சியற்ற ஒரு மனித சமூகத்தை, திராவிடத் திருநாட்டில் நிறுவுவதே தன் இலட்சியம் என்பதையும் தெளிவுபடுத்தியே வருகிறது.**

இந்த எண்ணத்தை நமக்கு வழங்கியவரும் பெரியார்தான்! அப்பேற்பட்டவர் ஒருபோதும் பலாத்காரத்துக்கும், வெறிச்செயலுக்கும் தம்மை அர்ப்பணிக்கமாட்டார் என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை. இன்று இப்படிச் சொல்கிற பெரியார், காந்தியடிகள் இறந்ததும், இந்த உபகண்டத்தின் பெயர், 'இந்து' மதத்தின் அடிப்படையில் இப்போதிருப்பதுபோல 'இந்தியா' என்று இருப்பதற்குப் பதில் "காந்தி நாடு" என்றே அழைக்கப்படவேண்டும் என்கிற அளவுக்குத் தெரிவித்தவராகும். ஆகவே, காந்தியடிகள் பேரிலோ, அரசியல் சட்டத்தின்மீதோ, எழுந்த ஆத்திரமல்ல பெரியாரின் இன்றையப் போக்குக்குக் காரணம். காமராசர் மூட்டிய, ஆசை என்போம்! சாதியினை ஒழிக்கும் முதல் நடவடிக்கையாக 'ஓட்டல் போர்டு'களையாவது மாற்றச் செய்திருக்கலாம்; செய்யவில்லை. அதற்குப் பதில், கொட்டுவதற்குச் சட்டம் நிறைவேற்றியிருக்கிறார்! இது கொடுமை என்பது மட்டுமல்ல, 'நன்றி மறவாதவன், தமிழன்' என்கிற பண்புக்கே, மாசுண்டாக்குவதாகும்—இப்படியொரு சட்டத்தின் மூலம் தான், 'இந்திய மாதா'வுக்குக் கவுரவம் கொண்டுவரப்பட வேண்டுமெனின், உண்மையில் காங்கிரசினரின் இன்றையப் போக்கு கண்டு உலகமே கேலி செய்யும்! கைகொட்டி நகைக்கும், வளர்த்த கடா மார்பிலே பாய்வது கண்டு!!

# நேரு மீது வழக்கு!

**நேரு** பண்டிதரின் பிறந்த நாளை இந்தக் கிழமை, சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

இதே சமயத்தில், அவரைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தியுள்ளார், ஒருவர்.

விடாது சண்டை போடும் பாகிஸ்தான் வாசியோ, என்பீர்கள்! அல்ல, அல்ல, எந்த இடத்தில் நேரு அவர்கள் பிறந்துவளர்ந்தாரோ அதே அலகாபாத் ஐகோர்ட்டில், அவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளார். துணிவுள்ள அந்த ஆசாமியின் பெயர் சீதாராம் செம்கா.

இந்திய உபகண்டத்தின் எழில் மாமணி-ஈடற்ற தலைவர்-ஒப்பற்ற விவேகி — முடிசூடா மன்னர் — சமாதானத் தூதர் — சமரசம் விரும்பி — ஆசியாவின் சோதி— அற்புதமான தியாகி என்று எங்கும் கொண்டாடுகின்றனர் நேருவை.

இருந்தாலென்ன!— என்கிறார், சீதாராம்.

ருசியா, அவர் கருத்துக்குக் காதுகொடுக்கிறது— அமெரிக்கா அவர் வாயிலிருந்து வரும் சொல்லைக் கவனிக்கிறது—எகிப்து, நாசர் இவர் வார்த்தையை வேதமாகக் கருதுகிறார்—இலண்டனுக்குச் சென்றால் வாசம் செய்ய அரண்மனையில் இடமளிக்கிறார்கள் — செஞ்சீனா இவரை அழைத்துச் சிறப்பு செய்கிறது— ஜப்பானுக்குச் சென்று புகழ்மாலைகள் சூடிவந்தார் — அவர் செல்லாத இடமில்லை! காணாத காட்சியில்லை!!

எல்லாம்சரியய்யா! ஆனால்...?—என்கிறார், சீதாராம் செம்கா.

காந்தியடிகளுக்கு அடுத்தபடி காங்கிரசைக் கட்டிக் காப்பது இவர்தானே — எதிர்க்கட்சிகள் கூட இவரது பொதுப்பணியின் சிறப்பை மறுப்பதில்லையே— குழந்தைகளோடு குழந்தை போலாகிவிடுகிறாரே—கொள்கைக் கோமானன்றோ இவர் என்கின்றனர், காங்கிரசினர்,

இருக்கட்டுமே எனக்கென்ன?— என்று வழக்குப்போட்டிருக்கிறார், இந்த ஐக்கிய மாகாணவாசி.

இவ்வளவு புகழும் பெருமையும் இருந்தாலும், பீகாரில் ஏன் பஞ்சம்? பலர் செத்து மடிகின்றனராமே! பல இடங்களில் ஏன் பட்டினிக் கொடுமைகள்? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தால் உணவு நிலைமையைச் சமாளித்துவிட்டதாகச் சொன்னாரே — இப்போது நாடு இப்படிக் காட்சி தருகிறதே என்பது அல்ல காரணம், அவர் வழக்கு தொடர்ந்திருப்பதற்கு.

வேலையில்லை! வேலையில்லை!!— என்று எங்கும் வாலிபர்கள் அலைகிறார்கள். மூளையுள்ள என்னைப் போன்றவர்கள் வாழ இடமில்லை, என்று சொல்லி பலர் குடும்பத்தோடு சாகிறார்கள். இவ்வளவு கேடுகெட்ட நிலையில் நாடிருக்கக் காரணம் யார்? பண்டித நேருதானே! கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிச் செலவழித்தும்— மக்களைக் கிட்டி கட்டி பணம் வசூலித்தும்—நாடு காணுகின்ற பலன் பஞ்சமும் பரதவிப்பும் என்றால், அலங்கோலத்துக்கு யார் காரணம்? ஆகவே, அவரைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்துகிறேன் என்று கூறுகிறாரோ சீதாராம் என்றால், அதுவுமில்லை!!

பசுவைத் தாம் குதிரை போலவே கருதுவதாக நேரு குறிப்பிட்டாராம்.

இதற்காகவே, இந்த வழக்கு! பசுவும், குதிரையும் மிருக இனத்தைச் சேர்ந்ததுதானே — இதில் என்ன தவறு? பசுவையும் குதிரையையும் ஒன்றாகவே கருதுவதாகச் சொல்லுவதில் குற்றமென்ன இருக்கிறது, என்று கேட்பீர்கள். சீதாராம், உங்களைப் போல, சராசரி மனிதரல்ல! இந்து மத பக்தர்—ஆகவே, இப்படி நேரு சொன்னதன் மூலம் இந்துக்கள் மனதைப் புண்படுத்திவிட்டதாக வழக்குத் தொடர்ந்திருக்கிறார்! வழக்கு, கீழ்கோர்ட்டில் தள்ளப்படவே, இப்போது ஐகோர்ட்டுக்குப் போயிருக்கிறார்!!

பசு! காமதேனுவின் அவதாரமன்றோ? அதனுள், சகல தேவர்களும் அடக்கமாகியுள்ளார்கள் என்றன்றோ புராணங்கள் சொல்லுகின்றன. அப்பேற்பட்ட பசுவும் ஒன்றுதான் எனக்கு, குதிரையும் ஒன்றுதான் என்று கூறலாமோ நேரு பண்டிதர். அவர் எவ்வளவு பெரிய தலைவராக வேண்டுமானாலும் இருக்கட்டும்! உலகமே போற்றுகிறவராகக்கூட இருக்கட்டும்!! அதனாலென்ன? இந்துக்கள் மனம், பசுவையும் குதிரையையும் 'சமமாக'ப் பாவிக்கிறேன் என்பதால், எவ்வளவு புண்பட்டுவிட்டது தெரியுமோ! — என்று, சீதாராம் தொடுத்திருக்கிறார் வழக்கு.

மிருகஇனத்திலே அடங்கியிருக்கும் பசுவும் எனக்கு ஒன்றுதான்; குதிரையும் ஒன்றுதான். குதிரையை விடப் பசுவிடம் புனிதத்தன்மை எதுவுமிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை! — என்றுதான் நேரு பேசினார்.

இதற்கு, வழக்குத் தொடர்ந்திருக்கிறார், இந்து மத சிரோன்மணி! குதிரையும் பசுவும் ஒன்றுதான் என்றது, இந்துக்களின் மனதைப் புண்படுத்திவிட்டதாம், இவருக்கு!!

அண்மையில், செயற்கைச் சந்திரனுக்குள், ஒரு நாயை வைத்து ருசிய அரசாங்கம் அனுப்பியது கண்டதும் அமெரிக்காவின் ஒரு புறத்திலேயிருந்து செய்தியொன்று வந்தது-"ஐயோ என்ன அக்கிரமம். நாய், வாயில்லா ஜீவனன்றோ? அதை இப்படி

பலியிடலாமா இந்த ருசியர்கள்! இதைக் கண்டிக்க வேண்டாமோ? சீவகாருண்யமே உலகில் அற்றுப் போய்விட்டதோ! ஐயோ, ஒரு நாயின் உயிர், பறிபோவதா?", என்பதாகக் கண்டனம் எழும்பியிருப்பதாக. நாயின் உயிர் எனினும் உத்தமமானதுதான்! ஆனால் அந்த உயிரைப் பணயம் வைப்பதன் மூலம் பெறக்கூடிய புதுமைகளிருக்கின்றனவே, அது அந்நாயைவிட மிக மிகச் சிறந்தது என்பது ஒருபுறமிருக்க, இப்படி ஒரு நாய்க்காகப் பரிதாபப்பட்டவர்கள் யார் என்று பார்த்தால் வேடிக்கையாக இருக்கும். அணுகுண்டுகளை வைத்துக்கொண்டு, அதன்மூலம் மனிதசமூகத்தையே அழித்துவிடுவோம் என்று மிரட்டிக்கொண்டு, அடிக்கடி சோதனைகளையும் நடத்திக் காண்பித்த வண்ணமிருக்கும் அமெரிக்காதான், ஒரு நாய்க்காக முதலைக் கண்ணீர் வடித்தது!!

இதோ, எண்ணற்ற பசுக்கள், மேய்ப்பாருமில்லாமல், தேய்ப்பாருமில்லாமல் திண்டாடுகின்றன — அந்தப் பசுக்களைவிடப் புனிதமான இலட்சக்கணக்கான குழந்தைகள், வீதியோரங்களிலும், சாலையோரங்களிலும், ஒரு வாய்ச் சோற்றுக்கும்வழியின்றி அல்லாடுகின்றன—காஞ்சி காமாட்சியிருக்கிறாள்—காசி விசாலாட்சியுண்டு—நாகை நீலாயதாட்சியிருக்கிறாள்—மதுரை மீனாட்சியும், வைரமும் தங்கமும் ஜொலிக்க, கம்பீரமாக இருக்கிறாள். ஆனால், நாட்டில், எண்ணற்றோர், அலைகிறார்கள்—மடிகிறார்கள் — ஐயகோ, என்று கண்ணீர்க்குளத்திலே மிதக்கிறார்கள். அவர்களைப் பற்றியோ, அவர்களுக்கு வாழ்வளிக்காத சர்க்காரைப் பற்றியோ, சீதாராமுக்கு அக்கறையேற்படவில்லை! பசுவைக் குதிரையென்றுசொல்லிவிட்டாராம் நேரு — பதைபதைத்துப் போய், வழக்குத் தொடர்ந்திருக்கிறார், நீதிமன்றத்தில்!!

**கேவலம் மிருக இனத்தில்கூட பசு; குதிரையென்று பேதம் பார்ப்பவர்கள், மனித இனத்தையா விட்டுவிடுவார்கள்! அதனால்தான் சீதாராம் போன்ற வெறியர்கள், மேல் சாதி—கீழ் சாதி என்பது போய்விடக்கூடாதே என்று நடுங்குகிறார்கள்!!**

* * *

"ஐயோ! ஆண்டவன் கோயிலுக்குள், தேவமொழியாம் சமஸ்கிருதம் தவிர, தமிழ் வரலாமோ?"

"அடுக்குமோ? ஆண்டவன் ஆலயத்துக்குள் தீண்டாதவர்களையும் நுழையச் சொல்வது?"

"பசுவும் குதிரையும் ஒன்றாகுமோ! பறையரும் பார்ப்பனரும் ஒரே குலமாகலாமோ?"

* * *

சீதாராம்கள், இந்துமத வெறியிருக்கின்ற ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறார்கள்.

வளர்ந்து வரும் புத்துலகில் இந்த வெறியர்களால் எந்தளவுக்குப் பேதமும் பிளவும் ஏற்படுகின்றதென்பதை, நாம் சொன்னால், பலருக்கு வகுப்புவாதமாகப் படக்கூடும். நேருவே, அண்மையில் வெளியிட்டிருக்கிறார்.

இந்திய துணைகண்டத்தைச் சேர்ந்த 1600 கல்லூரி மாணவ மணவிகளின் மாநாடொன்றில் அண்மையில் கலந்து கொண்ட நேரு, "நெற்றியில் நாமம் போடுவது, விபூதி பூசுவது ஆகியவை குறுகிய மனப்பான்மைக்கு அடையாளம்," என்று கூறினார். டில்லியில் நடந்த இம்மாநாட்டில் மேலும் அவர் பேசுகையில், "சந்திரனுக்கே போய் வரக்கூடிய அளவுக்கு விஞ்ஞானம், மனிதனுக்கு அதிக சக்தியைக் கொடுத்திருக்கிறது. இப்படி மற்ற நாட்டவர்கள் முன்னேறும்போது, நாமோ ஒரு பயங்கரமான 'இரும்புத் திரைக்கு'ப்பின்னால் இருக்கிறோம். சாதி வெறி, வைதீகம், குறுகிய மனப்பான்மை, மூடநம்பிக்கை, ஆகியவைகளைக்கொண்டதே, இந்த இரும்புத்திரை. இந்தத் திரைக்குப் பின்னால், நாம் கிணற்றுத் தவளைகளாக இருக்கிறோம். இந்தமாதிரி சாதி வேற்றுமைகளால், ஒருவர், இன்னொருவரை அந்நியர்களாக மதிக்கிறார்கள். யாரைத் தொடலாம், யாரைக் கலியாணம் செய்துகொள்ளலாம், யாருடன் உட்கார்ந்து சாப்பிடலாம் என்பதுபற்றி எல்லாம்கூடக் கட்டுப்பாடு வைத்துக் கொண்டிருக்கிறோம். சாதி முத்திரைகளாக நெற்றியில் நாமம் போடுவது, விபூதி பூசுவது ஆகியவை மூலம் மற்றவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதெல்லாம் குறுகிய மனப்பான்மையையே காட்டுகின்றது." இந்தக் குறுகிய மனோபாவம், விளைக்கும் கேடுகளால்தானே சாதிப்பூசல்கள் இன்னும் ஒழியவில்லை! ஆங்காங்கும் தகராறுகளும் பூசல்களும் உண்டாகிக்கொண்டே உள்ளன!!

நேரு, காரசாரமாகக் கண்டிக்கிறார். ஆனால், அவர் நினைத்தால் இதுபோன்ற வெறியர்களின் கொட்டத்தை அடக்கி, மனிதாபிமானம் மலரச் செய்ய வழி கிடையாதா?

தேள் கொட்டும்போது, நேரு போன்றோர், 'வலிக்கிறது' என்கிறார்கள்! பிறகு சமூகத்தை அரிக்கும் இந்தப் பிரச்னையை மறந்தே விடுகிறார்கள்!

அண்மையில், சென்னைச் சட்டசபையில், சாதிபேதங்கள் குறித்தும், அவைகளின் விளைவாக நாடு சீர்கேடுறுவது பற்றியும் அமைச்சர்கள் பேசினார்கள். ஆனால் சாதி ஒழிந்திட, சமரசம் மலர்ந்திட சிறு துரும்பளவாவது செயலிலுண்டா?

திருவையாறு கோயில்களில், கீழ் சாதியினரை விடோம்!— என்று இன்னும் பிடிவாதம் காட்டப்பட்டு வருகிறது. காரணம் கேட்டால், அது சொந்தக் கோயில் என்கிறார், அமைச்சர்.

தருமபுரம், திருவாவடுதுறை போன்ற மடங்களைச் சார்ந்த கோயில்களில் ஆதித்திராவிடர்களை அனுமதிப்பதில்லையாமே! —என்று இந்த 1957-லும் சட்டசபையில் கேள்வி கிளம்பும் நிலைமையிருக்கிறது.

இந்த நிலைமையை மாற்றி, மனிதப் பண்பு வளரும்மார்க்கத்தையன்றோ செய்ய வேண்டும், அரசு.

சாதிபேதமும், சண்டாளன் சனாதனியெனும் வேற்றுமையும் இருக்கும் வரை, நாடு எப்படி முன்னேறும்! விந்தையாக இல்லையா, நேரு மீது, 'பசுவையும் குதிரையும்' ஒன்று என்று கூறியதற்காக ஒருவர், வழக்குத் தொடருகிறார், என்பது!!

★

திவு எண். எம். 4642 தொலைபேசி என்... { அலுவலகம் 15 / இல்லம் ... 118

# காகிதத்தின் கதை

குப்பைக் காகிதம்—மிகவும் சுலபமாகச் சொல்லிவிடுகின்றோம் இந்த இரண்டு சொற்களை இந்தக் குப்பைக் காகிதம் இல்லாவிட்டால் நம்முடைய வாழ்க்கை எப்படி இருக்கும் என்று கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.

காலையில் எழுந்ததும் செய்திகளைத் தெரிந்துகொள்ள தாள்கள்; படிக்க புத்தகங்கள் வாங்கிய, கொடுத்த தொகைகளை எழுதிவைக்க பத்திரம், இவ்வளவு ஏன் ரூபாய் எல்லாமே இப்போது காகிதத்தில்தானே இருக்கின்றது? உலகத்தின் அறிவு, ஆட்சி நடைமுறை, எல்லாமே இன்று காகிதத்தின் மேலே நடக்கின்றது.

நாகரிக உலகத்தில் இவ்வளவு முக்கியமான பங்கு பெற்றிருக்கும் இந்தப் பொருள் எப்படி வந்தது? அது ஒரு பெரிய கதை.

காகிதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னே உலகத்தில் ஏதாவது எழுத வேண்டுமானால் மக்கள் எதன்மீதெல்லாமோ எழுதி வந்தனர். கருங்கல் பாறைகள், களிமண் பரப்புகள் எலும்புத் துண்டுகள் இப்படி எத்தனையோ பொருள்கள்! நம்முடைய நாட்டில் நெடுங்காலத்திற்கு முன் தாழை மடலிலே எழுதிவந்தனர். கோவலனுக்கு மாதவி தாழை மடலில் தான் தன் காதலை எழுதி அனுப்புகின்றாள். கடைசியாக நம்முடைய நாட்டில் பனை ஓலையில் எழுத்துக்கள் எழுதப்பட்டன.

இன்று உலகத்தில் பெரிய அளவில், நல்ல முறையில் காகிதங்களைத் தயாரிக்கும் நிலையங்கள் எல்லாம் மேற்கு நாடுகளில் இருந்தாலும் முதன் முதலில் காகிதத்தைக் கண்டுபிடித்த பெருமை சீனாவுக்குத்தான் உண்டு. கி. பி. 105-ம் ஆண்டில் லூன் என்ற சீனர்தான் முதன் முதலில் காகிதம் செய்தார். ஆனால் நெடுங்காலம் இது ரகசியமாக சீனர்களிடையில் மட்டும் இருந்தது. பிறகு முதன் முதலாக ஜப்பானியர்கள் இதைக் கற்றுக்கொண்டனர்.

பிறகுதான் ஐரோப்பா கண்டத்தின் நாடுகளுக்கு இந்தக் கலை தெரிந்து அங்கே இடம் பெற்றது. இங்கிலாந்து நாட்டில் பதினைந்தாம் நூற்றாண்டில்தான் காகிதம் தெரியும்.

சீனநாட்டினராகிய லூன் செய்த காகிதம் மென்மைக்கோ வழவழப்புக்கோ எடுத்துக்காட்டாக இல்லை என்றாலும், அது மிக உறுதியானதாக இருந்தது. கி. பி. 109-ல் அவர் செய்த காகிதங்கள் இன்னும் இருப்பதாகச் சொல்லுகின்றார்கள்.

ஒன்பதாவது நூற்றாண்டுவரை இந்த அரிய பொருள் கையினாலேயே எங்கும் செய்யப்பட்டு வந்தது. அதற்குப் பின்னர்தான் பொறிகளைக் கொண்டு காகிதத்தைப் பெரிய பெரிய தொழிற்சாலைகளில் செய்யத் தொடங்கினர். முதன் முதலில் புல், வைக்கோல், கந்தைகள் இவற்றை மட்டும்தான் காகிதம் செய்ய அரைத்துக் கூழாக்கிப் பயன்படுத்தினார்கள். ஆனால் நாளடைவில் காகிதத்தின் தேவை மிகுதியானதும் மரத்தூள்களும் காகித உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டன. இன்று உலகில் ஆண்டுதோறும் வெட்டப்பெறும் மரங்களில் இருபதில் ஒரு பங்கு காகிதம் செய்யப் பயன்படுகின்றது எனக் கணக்கிடுகின்றனர்.

உலகில் விஞ்ஞானம் விளைத்திருக்கின்ற பல புதுமைகள் பிறந்தவிதம் வேடிக்கையானதாகும். ஏதாவது ஒன்றைக் காண ஆராய்ச்சி நடக்கும் போது கைதவறி ஏதாவது ஒன்று நடந்துவிட, அது ஒரு புதுக் கண்டுபிடிப்புக்கு வழிகோலி வந்திருக்கின்றது.

வண்ணக் காகிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும் இப்படித்தான். கி. பி. 1790-ம் ஆண்டில் ஒரு காகிதத் தொழிற்சாலை அதிபரின் மனைவி கைதவறி நீல நிற வண்ணப்பொடி கொண்ட பை ஒன்றினை காகிதம் செய்யத் தயாரிக்கப்பட்டிருந்த கூழில் போட்டுவிட்டார்கள். அது, வெண்மை கலந்த நீல நிறக் காகிதம் முதன் முதலில் தயாரிக்க வழி கோலியது.

மை ஒற்றப் பயன்படும் காகிதமும் அப்படித்தான் ஒரு தொழிலாளி காகிதக் கூழில் ஏதோ ஒரு பொருளைக் கலக்க மறந்ததினால் உண்டானது.

ஆங்கில மொழியில் 'பேப்பர்' என்று குறிக்கப்படும் இந்தச் சொல் காகிதத்தின் பழைய உருவத்தை இன்னும் நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறது.

எகிப்திய நாட்டில் பேப்பரிஸ் என்ற ஒருவகை மெல்லிய பொருளில் முதன் முதலில் எழுதிக்கொண்டிருந்தனராம். மேற்கு நாடுகளில் அந்தப் பொருளும் பெயரும் பரவி இருந்தது சீனர்கள் செய்த காகிதத்தைக் கண்டதும் அதனையும் முதலில் 'பேப்பரிஸ்' என்று அழைக்கத் தொடங் நாளடைவில் அது 'பேப்பர்' என்று யுள்ளதாகக் கூறுகின்றனர்.

தமிழ் மொழியில் தாள் என் அதைக் குறிக்கின்றோம். 'காகித என்று கொச்சையாகச் சொல் கின்றோம். இந்த இரண்டு சொ களும் எப்படி அந்தப் பொருளை குறிக்கப் பயன்பட்டன என்ப அறியப்பட வேண்டியதாகும்.